கோகுலம்


GOKULAM

மே 2001


ரூ.6/-





பள்ளியில் அனைவரையும்
விரல் நுனியில் ஆட்டிப்
படைக்கிறேன்!!
பயமூட்டும்
விரல்
பிராங்கிஸ்!
FREE!
PRANKIES
Rasna
ORANGE
NEW
RICHER
THICKER
TASTIER
ORANGE
NEW














கோகுலம்

மலர்: 19 இதழ்: 4

மே 2001



உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
- பாரதியார்

ஒரு ஏழை அந்தணருக்கு இரண்டு மாடுகள் தானமாகக் கிடைத்தன. அவற்றின் பாலைக் கறந்து விற்று தன் ஜீவனத்தை நடத்தி வந்தார் அவர்.

இதை ஒரு திருடன் வெகு நாட்களாய் கவனித்து வந்தான். ஒருநாள் அவற்றைக் கவர்ந்து செல்ல திட்டம் வகுத்தான். இரவில் அவன் அந்தணன் வீட்டிற்குச் செல்லும் வழியில் ஒரு ராட்சசன் திருடனை விழுங்க முற்பட்டான்.


திருடன், "அரக்கனே! என்னை விட்டு விடு. உனக்கு என்னிலும் மேலான ஒரு வேதியனைக் காட்டுகிறேன். அவனைத் தின்று திருப்தியடைவாய்" என்றான்.

ராட்சசன் ஒப்புக் கொண்டு திருடன் பின்னால் சென்றான். அந்தணன் மெய்மறந்து உறங்கிக் கொண்டிருந்தான். அவனைக் கடித்து விழுங்கப் போனான் அரக்கன்.

திருடன் அவனைத் தடுத்தான்.

"முதலில் அவனைக் கொன்ற பிறகே தின்ன வேண்டும்" என்றான் திருடன்.

"நான் பிணத்தைத் தின்ன மாட்டேன். தவிர எப்படி தின்ன வேண்டும் என்று நீ சொல்லி நான் தெரிந்து கொள்ளும் நிலையில் இல்லை"





என்று கோபமாகச் சொன்னான் ராட்சசன்.

"சரி! நீ எப்படியோ செய்து கொள். நான் முதலில் மாடுகளைத் திருடிக் கொண்டு போகிறேன்"



அரக்கனும் திருடனும்

என்றான் திருடன்.

"முடியாது. மாடுகள் அந்நியனான உன்னைக் கண்டு கத்தினால் என் நிலை என்னாவது? இதற்கு நான் சம்மதிக்க மாட்டேன்" என்றான் அரக்கன்.

"வேதியன் கத்தினாலும் நான் ஏமாந்து போவேனே" என்றான் திருடன்.

இப்படி இருவரும் வாதம் செய்யவும் அந்தணன் விழித்துக் கொண்டான்.

"யார் நீங்கள்? என்ன விஷயம்?" என்று விசாரித்தான்.


"ஐயா! இவன் உங்களை விழுங்க வந்தவன்" என்றான் திருடன்.

"நீ மட்டும் யோக்கியமோ? நீயும்தான் இவரது மாடுகளைத் திருட வந்திருக்கிறாய்!" என்றான் ராட்சசன்.

உடனே துர்க்கா மந்திரங்களை அந்தணன் ஜபிக்க, ராட்சசனால் அங்கிருக்க முடியாமல் ஓடிப் போனான். மாட்டுக் கொட்டிலுக்குச் சென்று மாடுகளை அவிழ்த்துக் கொண்டிருந்த திருடனைப் பின்னால் சென்று தடியால் நையப் புடைத்தான் அந்தணன்.

திருடன் உயிர் தப்பினால் போதும் என்று ஓட்டம் பிடித்தான். அவர்கள் வாக்குவாதம் அந்தணனுக்கு வரமாயிற்று.

— பவித்ரா



விஷம விச்சி

குறுக்கெழுத்துப் புதிர்

இடமிருந்து வலம்

1. தமிழ் மாதங்களில் ஒன்று (4)

4. காகம், நரி என்றதும் பாட்டி இது செய்த கதை நினைவுக்கு வரும்' (2)

7. மழை என்பதை இப்படியும் அழைக்கலாம் (2)

11. இது கூவ பொழுது விடியும் என்பார்கள் (3)

12. விறகு எரிந்தவுடன் இது கிடைக்கும் (2)

14. பாரம்பரிய நடனம் (4)

வலமிருந்து இடம்

2. கரும்புச் சாறு, பனைச் சாறுகளிலிருந்து இந்த இனிப்பான பொருள் தயாரிக்கப்படுகிறது (4)

5. தாய் (3)

6. கதவுக்கு இது அவசியம் (2)

8. செவி (2)

10. ஈசாப்பின் இது உலகப் புகழ் பெற்றது (2)

15. அடித்தால் அழுவான்; உடைத்தால் சிரிப்பான் (4)

மேலிருந்து கீழ்

1. யோசனை (4)

2. பச்சையாகச் சாப்பிடக் கூடிய இந்தக் காய் வெயிலுக்கு ஏற்றது (4)

5. கடலில் ஏற்படும் இது ஓயாது. (2)

9. துணிச்சல் (4)

13. நரியின் உறவு இந்தப் பிராணி (3)

கீழிருந்து மேல்

3. போக்குவரத்து வசதிகள் இல்லாதபோது இதன் மூலம் தான் சற்று விரைவாகப் பயணம் செய்தார்கள் (3)


6. இடம் விட்டு இடம் செல்லாத உயிரினம் (4)


11. கிழங்குகளில் ஒன்று (2)

14. பறவைகளின் அரசன் (4)

15. ஜனநாயகத்தில் இதன் மூலம் ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள் (4)

— ஏ. குமார், ஒன்பதாம் வகுப்பு,
ஸ்ரீ சத்யசாய் ஸ்ரீநிவாசா
மேல்நிலைப்பள்ளி, திருப்பதி.





புதிர்

விடை: 59ம் பக்கம்



ஈசாப் கதை

"சீச்சீ! இந்தப் பழம் புளிக்கும்" என்று சொல்லிக் கொண்டே ஓடிப் போன நரியின் கதை எல்லா நாட்டுக் குழந்தைகளுக்கும் தெரியும். முதன் முதல் இக்கதையைச் சொன்னவர் ஈசாப் என்பவர். இவர் இதைப் போல பல கதைகள் சொல்லியிருக்கிறார். கிரேக்க நாட்டவரான ஈசாப் 2,500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர். முதலில் இவர் ஓர் அடிமையாக இருந்தாராம். பிறகு விடுதலை பெற்று ஊர் ஊராகச் சென்று சிறு சிறு கதைகளைச் சொல்லி வந்திருக்கிறார். அவற்றின் மூலம் மக்களுக்கு நீதிகளைப் புகட்டி வந்திருக்கிறார். இவருடைய கதைகள் எல்லாம் சுவை நிறைந்து இருக்கும். இக் கதைகள் எல்லாமே இவர் சொன்னவை அல்ல. இவற்றுள் பல ஏற்கெனவே இந்தியாவிலிருந்து கிரேக்க நாட்டுக்குச் சென்றவை. ஈசாப் இக் கதைகளை எழுதி வைக்கவில்லை. இவருக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு பாதிரியார் ஒருவர் இவற்றையெல்லாம் தொகுத்து அச்சிட்டு வெளியிட்டார். ஈசாப் சொல்லாத கதைகள் பலவும் இத் தொகுப்பில் சேர்ந்துள்ளன. ஈசாப் கதைகள் இப்போது உலகில் எல்லா மொழிகளிலும் வெளிவந்துள்ளன.

— எஸ். துர்கா காத்யாயனி,
ஒன்பதாம் வகுப்பு, புனித அலாய்சியஸ் மேல்நிலைப் பள்ளி, தூத்துக்குடி.

யாருடன் சேர்ந்து

ஒருமுறை குறுநில மன்னன் ஒருவனின் அவைக்கு ஔவையார் சென்றிருந்தார். அப்போது அந்த மன்னன் அவரை வணங்கிப் பணிவுடன் கேட்டான்:

"தமிழ் மூதாட்டியே. இவ்வுலகில் யாருடன் சேர்ந்து வாழ முடியாது என்று நீங்கள் கருதுகிறீர்கள்?" ஔவையார் புன்முறுவலுடன், "இந்த உலகில் நாம் சேர்ந்து வாழ முடியாத நபர் ஒருவர் உண்டு. அவர்தான் திரு. வயிறார்" என்றார்.



நிழலும் நிஜமாகும்!

அப்போது நம்முடைய நாட்டில் நூறு ரூபாய் கள்ள நோட்டுகள் ஏகப்பட்டவை புழங்கிக் கொண்டிருந்தன. இதைத் தடுக்க எண்ணிய நம்முடைய அரசு எச்சரிக் கைகளை விட்டிருந்தது.

அந்தச் சமயம் பெட்ரோல் பங்க்குகளில் யாராவது பெட்ரோல் போட்டு விட்டு நூறு ரூபாய் நோட்டு கொடுத்தால் அந்த நூறு ரூபாய்த் தாளில் அவர்களுடைய கையெ ழுத்தை வாங்கிக் கொள்வார்கள்.

அன்றும் அப்படித்தான், குறிப்பிட்ட பெட்ரோல் பங்க்கில் ஒரு கார் வந்து நின்றது. அதில் வந்த பெரியவர் காருக்குப் பெட்ரோல் போட்டுக் கொண்டார்.

பின்னர் ஒரு நூறு ரூபாய்த் தாளை எடுத்துப் பங்க்கில் உள்ள இளைஞனி டம் கொடுத்தார். பங்க் இளைஞன் நூறு ரூபாயையும் அதைக் கொடுத் தவரையும் ஒரு பார்வை பார்த்தான்.



பின்னர் பணிவான குரலில், "ஐயா நாங்கள் யாரிடம் நூறு ரூபாய் நோட்டு வாங்கினாலும் அதில் அவருடைய கையெழுத்தைப் பெற்றுக் கொள்வோம்" என்றான்.

"ஏன்?" என்றார் பெரியவர்.

"நூறு ரூபாய் கள்ள நோட்டுப் புழக்கத் தில் உள்ளதால் முன் ஜாக்கிரதையாக" என் றான் இளைஞன்.

பெரியவர் புன்முறுவலுடன் தன்னுடைய கையெழுத்தினை ரூபாய் நோட்டில் போட்டுக் கொடுத்தார்.

அதை வாங்கிப் பார்த்த இளைஞன் ஒருகணம் தடுமாறிப் போனான்.

"ஐயா, நாங்கள் யார் ரூபாய் கொடுக் கிறார்களோ அவர்களது கையெழுத்தைத் தான் போடச் சொல்கிறோம். ஆனால் நீங்கள் இந்த நோட்டில் எந்த கையெ ழுத்துப் போடப்பட்டுள்ளதோ அதைப் பார்த்து அப்படியே போட்டுத் தந் துள்ளீர்கள்!" என்றான்.

பெரியவர் புன்சிரிப்புடன், "தம்பி, ரூபாய் நோட்டில் அச்சடிக்கப்பட்ட கையெழுத்தும் நான் போட்ட கையெ ழுத்தும் ஒன்றுதான். அப்போது நான் ரிசர்வ் பாங்க் கவர்னராகப் பணிபுரிந்து வந்தேன். இப்போது ரிடையர் ஆகிவிட் டேன்!" என்றார்.

இளைஞன் பெரிதும் ஆச்சர்யப்பட் டான். அந்தக் கையெழுத்துக்குரியவர் ஹெச்.வி.ஆர். ஐயங்கார்.

வாழ முடியாது?

"எப்படி?" என்று ஆவலுடன் கேட்டான் அரசன்.

"உன்னுடைய வயிற்றிடம் இன்று ஒருநாள் மட்டும் உணவு வேண்டாம் என்று கூறிப் பார். அது கேட்க மறுத்து விடும். சரி இரண்டு நாளைக்குச் சேர்த்துச் சாப்பிடு என்று கூறி இரண்டு நாள் உணவை அதன் முன்னே வை. வேண்டாம் என்று அது நிராகரித்து விடும். இந்த வயிறு நமக்குத் துன்பம் தருவதற்காகவே ஏற்படுத்தப்பட்ட ஒன்று. எனவே இதனுடன் வாழ்வது அரிது" என்று ஔவை கூறினார். மன்னன் திருப்தி அடைந்தான்.

— சு. கண்ணகி,
மிட்டூர்.



உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ஹாபி இருக்கும். அவற்றுள் ரொம்ப சுவாரசியமான ஹாபி எது ன்றால் அது தபால் தலை சேகரிப்பு ான்! இதுக்கு மட்டும் அப்படி என்ன சேஷம் என்கிறீர்களா? இந்த ஹாபியால் ங்களுக்கு சந்தோஷம் மட்டுமின்றி றைய விஷயங்களைக் கற்றுக் கொள் வும் முடியும்.

எல்லா நாட்டிலும் தபால்களை னுப்புவதற்குத் தூரம் மற்றும் எடையை டிப்படையாகக் கொண்டு ஸ்டாம்ப்கள் வெளியிடப்படுகின்றன. ஆரம்ப கால ஸ்டாம்ப்களில் ஒன்றிரண்டு நிறங்களே பயன்படுத்தப்பட்டன. தற்போதோ கண் கவர் வண்ணங்களுடன் ஸ்டாம்ப்கள் வெளிவருகின்றன.

ஸ்டாம்ப்கள் மூன்று முக்கியக் காரணங்களுக்காக வெளியிடப்படுகின்றன.

1. தினசரி பயன்பாட்டிற்கான ஸ்டாம்ப்கள்.

2. ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியை கௌரவிக்கும் வகையில் வெளியிடப்படும் ஸ்டாம்ப்கள். இது குறைந்த அளவிலும் குறிப்பிட்ட காலத்துக்குள்ளும்தான் கிடைக்கும்.

3. நாட்டில் ஏற்படும் மிக முக்கிய நிகழ்ச்சிகளான சுதந்திரம், குடியரசு,



அதிசயமான ஹாபி!


புரட்சி போன்றவற்றைக் குறிக்கும் வகையில் வெளியிடப்படுவது.

ஸ்டாம்ப் சேகரிப்பின் மூலம் நிறைய கற்றுக் கொள்ள முடியும். எப்படி? பொதுவாக ஸ்டாம்ப்களில் மன்னர்கள், அரசியலமைப்பு, தலைவர்கள், பறவைகள், விலங்குகள், பூச்சிகள், கலைஞர்கள், கடல்வாழ் பிராணிகள், பூக்கள், எழுத்தாளர்கள் என பல உருவங்கள் இடம் பெறுகின்றன. போலியோ தடுப்பு, உலக சமாதானம், அறிவியல் ஆராய்ச்சி, மரம் வளர்ப்பு, ஒலிம்பிக்ஸ் போன்ற எண்ணற்ற விஷயங்களிலும் வெளியிடப்படுகின்றன. இந்தச் சிறு ஸ்டாம்ப்களின் மூலம் நம்மால் ஒரு நாட்டின் வரலாறு மற்றும் கலாசாரத்தை ஓரளவு தெரிந்து கொள்ள முடியும்.

சில நிகழ்ச்சிகளை முன்னிட்டு வெளியிடப்படும் தபால் தலைகளுடன் முதல் நாள் கவர் (Frist day cover) ஒன்றும் வெளியிடப்படும். இந்த கவரில் அந்தத் தபால் தலை ஒட்டப்பட்டிருப்பதோடு, உள்ளே அந்த நிகழ்ச்சியைப் பற்றிய தகவல்களும் அடங்கியிருக்கும்.

முத்திரையிடப்படாத ஸ்டாம்ப்களைச் சேகரித்தால் அவற்றுக்கு எப்போதும் மதிப்பு உண்டு. மிக அரிய ஸ்டாம்ப்கள் ஆயிரக்கணக்கில் விலைபோகக்கூடிய வாய்ப்பும் உண்டு. அப்படி இல்லை என்றாலும் தபால்களை அனுப்பும் போது





• முதல் நாள் கவர்

சாதாரண ஸ்டாம்ப் ஒட்டி அனுப்புவது போல் அனுப்பி விடலாம்.

ஸ்டாம்ப்களை எப்படி சேகரிப்பது?

ஆரம்பத்தில் நம் வீட்டிற்கு வரும் தபாலி லிருந்து வெட்டி (ஓரம் எல்லாம் கிழியக் கூடாது) தண்ணீரில் போட வேண்டும். சிறிது நேரத்தில் ஸ்டாம்ப்க்கு அடியில் உள்ள காகிதம் தனியாக வந்து விடும். பிறகு உலர்த்தி பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.

வீட்டிற்கு வரும் ஸ்டாம்ப்கள் மட்டும் போதாதே! உங்கள் நண்பர்கள், தெரிந்த வர்களிடம் கூட வாங்கிச் சேகரிக்கலாம். அல்லது உங்களிடம் இருப்பதை நண்ப ருக்குக் கொடுத்து, உங்களிடம் இல்லா ததை நண்பரிடமிருந்து வாங்கிக் கொள்ள லாம்.

உங்களிடம் பணம் இருந்தால் இந்தியா வெளியிடும் ஸ்டாம்ப்களை தபால் நிலை யத்தில் உள்ள 'பிலடெலி' பிரிவுக்குச் சென்று வாங்கிக் கொள்ளலாம். 'பில டெலி'யில் முன்பணம் செலுத்தி பதிவு செய்து கொண்டால் ஸ்டாம்ப்புகளையும், தகவல்களையும் தபாலிலேயே அனுப்பு வார்கள்.

முகவரி:

The Chief Postmaster,
Philatelic Bureau,
Anna Road HPO, Chennai - 600 002.

வெளிநாட்டு ஸ்டாம்ப்களை எப்படி சேகரிப்பது? பெரிய நகரங்களில் வெளி நாட்டு ஸ்டாம்புகள் விற்கப்படுகின்றன. வெளிநாட்டில் உள்ள உறவினர்கள் மூல மாகவோ அல்லது பேனா நண்பர்கள் மூலமாகவோ அந்த நாட்டு ஸ்டாம்ப் களைப் பெற்றுக் கொள்ளலாம்.

சேகரித்த ஸ்டாம்ப்களை எப்படி பாது காப்பது? கடைகளில் ஸ்டாம்ப் ஆல்பம் விற்கப்படுகிறது அதை வாங்கி வரி சையாக செருகி வைத்து விடலாம். ஆல்பம் வாங்க இயலவில்லை என் றால் பேப்பர் வாங்கி தைத்து அதில் ஒட்டி விட லாம். செலவு குறைவு.

ஆரம்பத்தில் பலதரப்பட்ட ஸ்டாம்ப் களைச் சேகரிக்கலாம். அதில் ஆர்வம் அதிகமான பின் ஏதாவது ஒரு வகை ஸ்டாம்ப்களை மட்டும் சேகரிக்கத் தொடங்கலாம். உதாரணமாக உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் வெளியிட்ட வண்ணத்துப் பூச்சி ஸ்டாம்ப்கள் மட்டும் சேகரித்து வைத்துக் கொள்ளலாம்.

ஸ்டாம்ப் சேகரிப்போருக்கான கண்காட்சி அவ்வப்போது நடைபெறு கிறது. அக் கண்காட்சியில் உங்கள் சேகரிப் பையும் வைக்கலாம். அரிய ஸ்டாம்ப்களை நல்ல விலைக்கு விற்கவும் முடியும். மற்றவர்களிடமிருந்து உங்களிடம் இல்லாத ஸ்டாம்ப்களைப் பெறவும் முடியும்.

ஸ்டாம்ப் சேகரிக்க வயது நிர்ணயம் ஒன்றும் கிடையாது. 7 வயது முதல் 77 வயது வரை யார் வேண்டுமானாலும் சேகரிக்கத் துவங்கலாம்.

ஸ்டாம்ப் சேகரிப்பு ஒரு ஜாலியான ஹாபி மட்டும் அல்ல, ஒரு 'வேல்யூ'வான ஹாபியும் கூட. நீங்களும் சேகரியுங்கள். அதன் மகிழ்ச்சியை அனுபவியுங்கள். இது தனி நபர் சம்பந்தப்பட்ட ஹாபி கிடை யாது. இதன் மூலம் நட்பு வட்டம் விரி வடையும். உங்களுக்குத் தேவை ஆர்வம், விடாமுயற்சி, உழைப்பு மட்டுமே! வாழ்த் துகள்!

அட்டையில் : **எஸ். விஷ்ணுவர்த்தன்**
வண்ணப்படம் : **ஸ்ரீஹரி**

COOL OFF THE HEALTHY WAY!

COVER STORY

EARTH DISASTER

SCIENCE FICTION

HARBAJAN, V.V.S. LAKSHMAN





POSTERS

RS.6/- MAY 2001

GOKULAM

The monthly magazine for children

ADONIS, GOD OF THE SEASONS

MYTHOLOGY


47, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097

FUNTASTIC YELLOW STATIONS

INDOOR GAME

NEWTON'S DIAMOND


PERSONALITY



சிவப்பு

சூரிய குடும்ப உறுப்பினர்களில், தாய்க்குத் தலை மகன்போல் மிகவும் பெரியவர் வியாழனார் தான்! இதன் மேலுள்ள பெரிய சிவப்பு மச்சமும் அதன் வளிமண்டலமும் இன்னமும் வானவியலாளர்களின் மூளையைக் கசக்கும் விஷயங்களாகும். வியாழனிலுள்ள பெரிய செம்புள்ளியை 1664ல், ராபர்ட் கூக் என்ற விஞ்ஞானி கண்டு பிடித்தார். தூரத்திலிருந்து பார்க்கும்போது பெரிய நீர்ச்சுழல் போல் தோற்றமளிக்கும் வியாழனின் சிவப்பு மச்சம், பூமியின் விட்டத்தைவிட 1½ மடங்கு பெரியது.

அமெரிக்காவின் நாசா விண்கல தளத்திலிருந்து, சூரிய குடும்ப உறுப்பினர்களாகிய கோள்களைப் பற்றி அறிய, 'கலீலியோ' என்ற விண்கலம் ஏவப்பட்டது. இது அகச்சிவப்புக் கதிர்களைப் பயன்படுத்தி வியாழன் கோளைப் படமெடுத்து அனுப்பியுள்ளது. விஞ்ஞானிகள் முன்பு கருதியதுபோல், வியாழனின் செம்புள்ளி வெறும் புழுதிப் புயலால் ஆன மேகச் சூழல் அல்ல என்பது தெரியவந்துள்ளது. அந்தச் செம்புள்ளி பரப்பானது வியாழனின் மேற்பரப்பு



பகுதியிலிருந்து சற்று மேலெழும்பி காணப்படுகிறது. வியாழனின் ஆழமான அடித்தளத்திலிருந்து பொருட்களை வெளியே இழுத்துக் கொண்டு வந்து, அவற்றுடன் வேகமாய் வியாழனைச் சுற்றுகிறது. அதிலிருந்து அம்மோனியா மேகம் சிதறடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இது அப்புகை மண்டலத்தின் ஓரங்களில் வழிந்து, மீண்டும் அப்படியே வியாழனின் துளைக்குள் விழுகிறது. அதனாலேயே இப்புள்ளி குடை விரிந்தது போன்ற தோற்றத்தைத் தருகிறதாம்.



மச்சமுள்ள கோள்!

1995ல் செலுத்தப்பட்ட கலீலியோ விண்கலம், நிறைய புதிய செய்திகளைப் பூமிக்கு அனுப்பியது. வியாழனில் காணப்படும் செம்புள்ளிக்குள் உள்ள வளிமண்டலப் பொருட்கள் 'ஜாவாலியன் மேகங்கள்' என்று அழைக்கப்படுகின்றன. அவற்றிற்குள் கொஞ்சம் தண்ணீரும் இருக்கிறது என்று தெரிய வருகிறது. டாக்டர் டாய்லர் என்பவரின் சம்பத்திய ஆராய்ச்சி, வியாழனின் அனைத்து இடங்களிலும் நீர் உள்ளது என்று சொல்லுகிறது. மேலும் கலீலியோவின் தகவல்படியும், வியாழனின் உலர்ந்த பகுதிகளிலும் நீர் இருப்பது தெரிய வந்துள்ளது.

வியாழனை கலீலியோ எடுத்த. அகச் சிவப்பு கதிர் படங்கள் வியாழனின் புழுதிப் பகுதியில் அம்மோனியாவும், அதன் மேற்புறத்தில் கனிமப் பொருட்களும் பரவிக் கிடக்கும் உண்மையைக் காண்பிக்கின்றன. அம்மோனியாவுக்குக் கீழுள்ள பகுதிகளிலும், அதற்கு அடுத்த அடுக்கிலும் அம்மோனியாவும், ஹைடிரஜன் சல்பைடும் உள்ளன. அதன் கீழடுக்கில் நீர் இருக்கலாம் என நம்பப்படுகிறது.

இதுவரை கிடைத்துள்ள தகவல்கள் எல்லாம், வியாழனைப் பற்றி அறியும் துவக்க நிலையே! அதிலுள்ள புள்ளியின் அதிசயப் புதிரை விடுவிக்க இன்னும் கொஞ்சம் புள்ளி விபரங்கள் தேவைப் படுகின்றன. அது ஏன் சுற்றிக் கொண்டிருக்கிறது? அதன் வாழ்நாள் எவ்வளவு? என்ற வினாக்களுக்கான விடைகள் கிடைக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

\- ஸ்வாதி

டூத் பிரஷ்ஷின் கதை

நாம் காலையில் எழுந்தவுடன் பேஸ்ட் எங்கே, பிரஷ் எங்கே என்றுதான் தேடுகின்றோம். பிரஷ் கண்டுபிடிக்கப்பட்டதே ஒரு விநோதமான கதை.

17-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து நாட்டில் நியுகேட் என்ற சிறைச்சாலையில் வில்லியம் ஆடிஸ் என்ற கைதி இருந்தான்.

சிறையில் இருக்கும் பொழுது அவன் பல் துலக்குவதற்குக் கிழிந்த துணிகளையும், பல் குத்துவதற்குச் சிறு கம்பிகளையும் உபயோகித்து வந்தான். இதற்குப் பதிலாக வேறு ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவன் மனத்தில் உதித்தது. ஏனென்றால் இதைப் பயன்படுத்தும் பொழுது மிகச் சிரமமாக இருந்தது அவனுக்கு.


ஒருநாள் அவனது உணவில் எலும்புத் துண்டு இருந்தது. அதை எடுத்துக் கொண்டு அதில் சில நார்களைப் பொருத்தினால் பல் துலக்க எளிதாக இருக்குமே என எண்ணி அதைப் பத்திரப் படுத்திக் கொண்டான்.

பின்பு சிறை அதிகாரிகளிடம் சொல்லி கடினமான நார்ப் பொருள்களைப் பெற்றுக்கொண்டான். சிறு துளைகளை எலும்புத் துண்டில் போட்டு நார்களை அதில் செருகினான். இதுதான் உலகில் முதல் டூத் பிரஷ் ஆகும்.

சிறையை விட்டு வெளிவந்தவுடன் டூத் பிரஷ் செய்து பெரும் பணம் ஈட்டினான் வில்லியம் ஆடிஸ்.


– இ. சிவசுப்பிரமணி,
ஏழாம் வகுப்பு, சி.ஆர்.ஆர்.
மெட்ரிகுலேஷன் பள்ளி,
ஒண்டிப்புதூர், கோவை மாவட்டம்.





1


என்ன பழமொழி?




கோடை விடுமுறைப் போட்டி - I


இங்கு மூன்று தொகுதிகளாகப் படங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. முதல் தொகுதியில் உள்ள படங்களின் முதல் எழுத்தையும், இரண்டாவது தொகுதியில் உள்ள படங்களின் இரண்டாவது எழுத்தையும், மூன்றாவது தொகுதி படங்களிலிருந்து மூன்றாவது எழுத்தையும் எடுத்து எழுதி வரிசைப்படுத்துங்கள். உங்களுக்கு நன்கு அறிமுகமான பழமொழி ஒன்று கிடைக்கும். பழமொழியைக் கண்டுபிடித்து எழுதி முகவரி கூப்பனையும் ஒட்டி, உங்கள் முழு முகவரியையும் எழுதி அனுப்புங்கள். அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். பரிசு ரூ. 300/- சரியான விடைகளை எழுதிய 10 பேருக்குப் பரிசு பகிர்ந்தளிக்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

3





2



ஆசிரியர்,
கோகுலம்
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை – 97




கோகுலம்
போஸ்டர்

கதிர்வீச்சு எதிர்ப்பு துணி

கம்ப்யூட்டர்களின் பயன்பாடு, மருத்துவமனைகளில் கதிர்வீச்சு கருவிகள் மற்றும் மின்னணுப் பொருள்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. இவற்றிலிருந்து வெளியாகும் மின்காந்தம் மற்றும் கதிர்வீச்சு மனித உடலுக்குக் கேடு விளைவிக்கின்றன. மேலும் ஓசோன் வளி மண்டலத்தில் ஏற்பட்டுள்ள ஓட்டை காரணமாக புற ஊதாக் கதிர்களின் வீச்சும் அதிகரித்துள்ளது. இது தோல் புற்று நோய் ஏற்படுத்தும் அபாயம் உள்ளது. இவற்றிலிருந்து காத்துக் கொள்ள சீனாவில் புது வகை துணி ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் விலை சாதாரண துணியை விட 30 முதல் 40 சதவீதமே அதிகமாக இருக்கிறது.

நெருப்பு எறும்பு


ஆஸ்திரேலியாவில் பிரிஸ்பேன் நகரில் மனிதர்களைக் கொல்லக் கூடிய ஆயிரக்கணக்கான நெருப்பு எறும்புகள் படையெடுத்துள்ளன. தென் அமெரிக்காவின் நெருப்பு எறும்புகள் என்று அழைக்கப்படும் இவை தோற்றத்தில் சாதாரண எறும்புகளைப் போல் இருக்கும். சிவப்பு, பழுப்பு, பொன் நிறங்களில் காணப்படும். இவற்றின் புதரை யாராவது கலைத்து விட்டால் ஆக்ரோஷமாகப் பறந்து வந்து கடித்து விடுகின்றன. இந்த எறும்பால் கடிபட்டவர்கள் ஒவ்வாமை நோய் ஏற்பட்டு இறந்து விடுவர். பிரிஸ்பேன் நகரில் பல இடங்களில் இத்தகைய எறும்புகள் இருக்கின்றனவாம்!

மிர் விண்கலம்

1986ஆம் ஆண்டு 136 டன் எடையுள்ள மிர் விண்கலத்தைச் செலுத்தி சாதனை படைத்தது ரஷ்யா. விண்வெளியில் ஆய்வு நடத்தி தகவல்கள், படங்களை பூமிக்கு அனுப்பி வைக்கும் விண்கலம் ஒன்றை நிரந்தரமாக அமைக்க திட்டமிட்டதின் விளைவுதான் மிர் விண்கலம். 88 ஆயிரம் முறை பூமியைச் சுற்றி வந்த இந்த விண்கலம் 15 ஆண்டுகள் உழைத்து சோர்ந்து விட்டது. கடந்த ஓராண்டாக பல கோளாறுகளுக்கு உள்ளாகியது. ரஷ்யா பலமுறை வீரர்களை அனுப்பி கோளாறுகளைச் சரி செய்தது. எனினும் தொடர்ந்து கோளாறு ஏற்பட்டதால், விண்கலத்தை காற்று மண்டலத்துக்குள் கொண்டு வந்து கடலில் விழச் செய்ய முடிவெடுக்கப்பட்டது. இதன்படி மார்ச் 23ந் தேதி காலை 11.30 மணிக்கு மிர் விண்கலம் வெடிக்க வைக்கப்பட்டது. சிதறிய பாகங்கள் பசிபிக் பெருங்கடலில் விழுந்தன. மக்களை அச்சத்தில் ஆழ்த்திய இந்த மிர் விண்கலம் யாருக்கும் சேதமின்றி கடலில் மூழ்கிவிட்டது.

உலக சாதனை

உலகில் கொடி கட்டிப் பறக்கும் 32 இசை வல்லுனர்களின் 32 பாடல்களை 6 வயது சீனச் சிறுமி பியானோவில் இசைத்து உலக சாதனை படைத்திருக்கிறாள். இதை வாசிக்க 57 நிமிடங்கள் ஆனது. இச்சிறுமியின் பெயர் சாங்கஹான். 4 வயது முதல் பியானோ கற்று வருகிறாள். இவளது பெயர் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறும் என்று கின்னஸ் நிறுவனம் கூறியுள்ளது.



மிர் விண்கலம்

உங்கள் எதிர்கால வழிகாட்டி :

முன்னாள் டெஸ்ட் வீரர் வி.பி. சந்திரசேகர்



ஒருகாலத்தில் வெறும் பொழுதுபோக்கு விளையாட்டாக மட்டும் இருந்த கிரிக்கெட் விளையாட்டு இன்று தொழில்ரீதியான விளையாட்டாக மாறி விட்டது. டாக்டராக, இன்ஜீனியராகப் பணிபுரிந்து லட்சக்கணக்கில் வருமானம் ஈட்ட வாய்ப்பிருப்பது போல, தொழில்ரீதியாக கிரிக்கெட் விளையாடுபவர்களும் லட்சக்கணக்கில் சம்பாதிக்கிறார்கள். எனவே இன்றைய சூழ்நிலையில் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் எதிர்காலத்தில தாங்கள் சிறந்த கிரிக்கெட் ஆட்டக்காரராக விளங்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். இதற்கு ஆட்டத்தின் மீதுள்ள ஆர்வமும் ஒரு காரணம் என்று சொல்லத் தேவையில்லை. அப்படி விரும்பி வருபவர்கள் ஏனோதானோவென்று பயிற்சி பெற்று விட்டு, ஆசை முற்றுப் பெறாத நிலையில், 'அதிர்ஷடம் இல்லை; நமக்கு இது சரிப்பட்டு வராது' என்று இடையில் கிரிக்கெட்டை விட்டு திசை மாறி விடுகிறார்கள். லட்சியத்தை எந்தக் கட்டத்திலும் விட்டு விடாமல், முறையான பயிற்சியில் ஈடுபட்டால் வெற்றி நிச்சயம். அதற்கு என்ன செய்ய வேண்டும்?

பதினெட்டு, பத்தொன்பது வயதில் சிறந்த கிரிக்கெட் வீரராக வர வேண்டுமென்றால் அதற்கான பயிற்சியை பதினோரு வயதிலேயே துவங்குவதுதான் சரியாக இருக்கும். கிரிக்கெட்டுக்கு முதலில் தேவை திறமையும் நுட்பங்களும் மட்டும் அல்ல; நம்முடைய உடலை, விளையாட்டுக்கு ஏற்றபடி முற்றிலும் தகுதி வாய்ந்ததாக வைத்துக் கொள்வதுதான். அதாவது பிஸிகல் பிட்னஸ். இந்திய கிரிக்கெட் அணியில் அதிக வயது (38) கொண்டவர் ராபின் சிங். ஆனால் அணியில் மிகவும் இளைய வயது கொண்டவருடன் ஒப்பிடும் அளவுக்கு உடற்தகுதியை வைத்துக் கொண்டு இருப்பவர் அவர். அந்த அளவுக்கு தினசரி உடற்பயிற்சிகளை செய்து கொண்டு வருபவர். இங்கு நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் கிரிக்கெட் ஆட்டத்தை கற்றுக் கொள்ள நீங்கள் செலவழிக்கும் அதே நேரத்தை உடற்பயிற்சிக்கும் செலவழிக்க வேண்டும் என்பதுதான். உடற்பயிற்சி என்றால் மைதானத்தைச் சுற்றிப் பத்து முறை ஓடி விட்டு, முடித்து விடுவது அல்ல. ஒருமுறையான பயிற்சியாளரின் வழிகாட்டுதலில் பயிற்சியில் ஈடுபட வேண்டும். பதினோரு வயதிலேயே முறையான உடற்பயிற்சியைத் துவங்கி விட்டால் இருபது வயதை நெருங்கும் போது உடல் கிரிக்கெட் விளையாட்டின் சவால்களை எதிர்கொள்ள முற்றிலும் தகுதியானதாக மாறி விடும். அதிலும் நீங்கள் வேகப் பந்து வீச்சாளராக பயிற்சி பெற விரும்பி



கிரிக்கெட் வீரராவது உங்கள் லட்சியமா?

னால், களைப்படையாத சுச்சிதமான உடல்வாகு இருக்க வேண்டும். முறையான பயிற்சியாளரின் கீழ் பயிற்சி எடுத்துக் கொள்ளாவிட்டால் தேவையில்லாத இடத்தில் சதை வளர்ச்சி உண்டாகி, பாட்டிங், பௌலிங் என்று இரண்டுமே பாதிக்கப்படக் கூடும்.

கிரிக்கெட் பயிற்சியில் இறங்கும் சிறுவர்கள், தொடக்கத்திலேயே தாங்கள் சிறந்த பாட்ஸ்மேனாக வரவேண்டும் என்று பாட்டிங்கில் மட்டுமோ அல்லது பந்து வீச்சாளராக வர வேண்டுமென்று பௌலராக மட்டுமோ பயிற்சி எடுத்துக் கொள்ளக் கூடாது. கிரிக்கெட்டின் சகல அம்சங்களிலும் பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். தினசரி மூன்று மணி நேரம் பாட்டிங் பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். இதில் அரைமணி நெட் பிராக்டீஸ். ஒரு வாரம் கவர் டிரைவ் எப்படி ஆடுவது என்று பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். இதுபோல தினசரி அரை மணி நேரம் ஃபீல்டிங் பிராக்டீஸ் செய்ய வேண்டும். தனியாக 'காட்ச்' பிடித்துப் பழக வேண்டும். நான்கு நாள் வேகப் பந்து வீச்சில் பழக வேண்டும். இரண்டு நாள் நெட் பிராக்டீஸ் செய்ய வேண்டும். ஒரே ஒரு ஸ்டம்பை மட்டும் வைத்து, அதைக் குறியாகக் கொண்டு பௌலிங் போட்டுப் பழக வேண்டும். நல்ல ஒரு பயிற்சியாளரின் கீழ் ஆட்ட நுணுக்கங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். இப்போதெல்லாம், பாட்டிங், பௌலிங், விக்கெட் கீப்பிங் என்று தனித்தனியாகக் கற்றுக் கொடுக்க பயிற்சியாளர்கள் இருக்கிறார்கள்.

பாட்ஸ்மேனாக வருவதா; அல்லது பந்து வீச்சாளராக வருவதா? பந்து வீச்சாளர் என்றால் வேகப் பந்தா; சுழல் பந்தா? இதுபோன்ற குழப்பமான நிலையை ஒரு இளைஞன் சந்திக்க நேரிடும். இந்த நிலையில் எப்படி முடிவெடுப்பது?

இடது கை சுழல் பந்து வீச்சாளராகத் துவங்கிய ஹேமங் பதானி இன்று பாட்ஸ்மேனாக பளிச்சிடுகிறார். நான் கூட வேகப் பந்து வீச்சாளராக அறிமுகமாகி, பாட்டிங் பக்கம் தாவினேன். எந்தப் பிரிவு உங்களுக்கு வசப்படுகிறது என்பது நாளடைவில் உங்களுக்கே புரிந்து விடும். பல போட்டிகளில் கலந்து கொண்டபின், உங்களை நீங்களே சுய விமர்சனம்



செய்து பார்த்துக் கொண்டால் சரியான வழி தென்படும். இதற்குப் பயிற்சியாளர் உங்களுக்கு உதவக் கூடும். 14, 16, 19 வயதிற்குள் இருப்பவர்கள் கலந்து கொள்ளக் கூடிய வகையில் தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தால் போட்டிகள் நடத்தப்படுகின்றன. முதலில் உங்கள் பள்ளிக்கு விளையாடும் அளவுக்கு உங்களை நீங்கள் தகுதி படைத்தவராக மாற்றிக் கொள்ள வேண்டும். பிறகு கிரிக்கெட் சங்கம் நடத்தும் போட்டிகளில் பங்கு பெறுங்கள். பள்ளி அணி தவிர லீக் மாட்சுகளில் வெற்றிக் கொடி நாட்டும் அணியில் சேர்ந்து ஆட்டத்தைத் தொடருங்கள். நான்கு போட்டிகளில் ரன் எடுக்கவில்லையென்றோ அல்லது விக்கெட்டுகளை வீழ்த்த முடியவில்லையென்றோ இடிந்து போய் உட்கார்ந்து விட வேண்டாம். நல்ல ஆட்டக்காரராக வருவதற்கு முக்கியத் தேவை விடா முயற்சி; இடைவிடாத பயிற்சி. விட்டொழிக்க வேண்டியது, விரக்தி மனப்பான்மை; சோம்பேறித்தனம். படிக்கும் இளைஞர்களுக்கு தினசரி பிராக்டீஸ் என்பது, படிப்பைப் பாதிக்குமே என்று கேட்கலாம். சரியானபடி நேரத்தை நிர்வகித்துக் கொண்டால் படிப்புக்கு எந்தப் பாதிப்பும் வராது.

அடுத்து நான் சொல்லப் போவது மிக முக்கியமான விஷயம். ஒரு ஆட்டக்காரருக்கு அவசியமாகத் தேவைப்படும் ஒன்று நல்ல மனநலம். யோகாசனம், மனநலப் பயிற்சி ஆகியன முக்கியத் தேவை. மன தைரியம், மனதை ஒருமுனைப்படுத்துவது ஆகியவற்றுக்கு மனநலப் பயிற்சி முக்கியம். ஆந்திர மாநிலம் சித்தூரைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மாவட்ட அளவில் சிறந்த ஆட்டக்காரராக விளங்கினார். பெங்களூர் சின்னசாமி மைதானத்தில் ஒரு போட்டி. அந்தப் போட்டியில் முதல் பந்திலேயே அந்த இளைஞர் அவுட். எல்லோருக்கும் ஆச்சர்யம். ''என்ன ஆச்சு?'' என்று கேட்டபோது, "மைதானத்தின் நடுவில் நின்று ஒரு முறை சுற்றிப் பார்த்தபோது, 'எவ்வளவு பெரிய மைதானம்' என்று பிரமித்து விட்டேன். ஒரு பதற்றம் வந்து பிடித்துக் கொண்டது; முதல் பந்திலேயே அவுட்" என்றார் அந்த இளைஞர். இந்த விதமான பதட்டத்தைப் போக்கத்தான் மனநலப் பயிற்சி தேவை. ஒரு சிறுவன் சிறந்த ஆட்டக்காரனாக உருவாக விரும்பும் போது அவனது குடும்பம் முழுவதும் அவனுக்கு ஊக்கத் துணையாக இருக்க வேண்டும். ஒரு மாட்சில் சரியாக ஆடாவிட்டால், 'போன வாரம்தான் 2000 ரூபாய்க்கு புது பாட் வாங்கித் தந்தேன்; தண்டம்' என்றெல்லாம் திட்டக்



வி.பி. சந்திரசேகர் இந்திய கிரிக்கெட் அணியில் டெஸ்ட் போட்டிகளில் விளையாடியவர். வி.பி. கிரிக்கெட் அகாதமியை உருவாக்கி சிறுவர்களுக்கு கிரிக்கெட் பயிற்சி அளித்து வருகிறார்.

கூடாது. 'சரி; விடு; அடுத்த போட்டியில் பார்த்துக் கொள்ளலாம்' என்று ஆறுதல் சொல்ல வேண்டும்.

கிரிக்கெட்டில் ஆர்வம் காட்டும் மகன் படிப்பிலும் சோடை போய் விடாமல் பார்த்துக் கொண்டு வர வேண்டும். கிரிக்கெட்டில் ஆர்வம் இல்லாதவனை ஆட்டப் பயிற்சி மேற்கொள்ள வற்புறுத்தக் கூடாது. பெற்றோருக்கு அதிக செலவு வைக்கும் விளையாட்டு அல்ல இது. நடுத்தரக் குடும்பத்தினர் தாராளமாக இதில் இறங்கலாம்.


கிரிக்கெட் சம்பந்தமான வீடியோ படங்களை நிறையப் பார்க்க வேண்டும். உலகமெங்கும் நடக்கும் போட்டிகளை தொலைக்காட்சியில் பார்க்க வேண்டும். ஒவ்வொரு ஆட்டக்காரரும் எப்படி ஆடுகிறார் என்ற நுணுக்கங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். டெண்டுல்கரின் ஸ்டைலை எடுத்துக் கொள்ள விரும்பினால், அவரது ஆட்டத்தை அடிக்கடி வீடியோவில் போட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும். பிரபல கிரிக்கெட் வீரர்கள் எழுதிய வாழ்க்கைச் சரிதங்களைப் படிக்க வேண்டும். சாதாரண நிலையிலிருந்து பல சவால்கள், தோல்விகள் ஆகியவற்றைச் சந்தித்து, வெற்றி பெற்ற வரலாறு அதில் இருக்கும். உங்கள் விடாமுயற்சிக்கு அதுபோன்ற புத்தகங்கள் தூண்டுகோலாக இருக்கும்.

பொதுவாக கிரிக்கெட்டைப் பற்றிப் பேசும் போது கூடவே அதிர்ஷ்டத்தைப் பற்றியும் பேசுவார்கள். இந்த 'அதிர்ஷ்டம்' என்ற பேச்சு ஒரு பக்கம் இருந்தாலும், நீங்கள் உங்களை முற்றிலும் பயிற்சி பெற்ற நல்ல ஆட்டக்காரராக மாற்றிக் கொள்ளாத நிலையில் அதிர்ஷ்டம் பற்றியெல்லாம் பேசக் கூடாது. கிரிக்கெட் உங்களை பல இடங்களுக்கு அழைத்துச் செல்லும். மனிதநேயம், நல்லிணக்கம், தோழமை உணர்வு, கட்டுப்பாடு ஆகியவற்றை வளர்ப்பதில் கிரிக்கெட்டுக்கு பெரும் பங்கு உண்டு. அந்த வகையில் நல்ல ஆட்டக்காரர், நல்ல இந்தியனாக உருவாகிறார்.

— ப்ரியன் ஸ்ரீநிவாசன்

படங்கள் : ராஜன்

ஹா...ஹா...ஹா!



"மழை பெய்யாம இருந்தா நல்லதா... ஏன்?"

"புதுசா வாங்கின குடை நனைஞ்சிடுமே!"


– தஞ்சை தாமு



"பேராசைனு ஒரு புத்தகம் வெளியிட்டீங்களே என்ன ஆச்சு?"

"பெருநஷ்டம் ஆயிடுச்சு...!"

- துரை. முருகேசன்



"அவனுக்குக் கோபம் வந்துச்சுனா கண்ணு மண்ணு தெரியாது."

"என்ன செய்வான்?"

"தடுக்கிக் கீழே விழுந்துடுவான்!"

– ராமகிருஷ்ணன்

பக்த விஜயம்!

போகாரி தாஸரின் சீடர் அக்ரஜி. அவர் சிறந்த விஷ்ணு பக்தர். தினமும் பூஜை செய்து பஜனை முடிந்ததும் யோக நிஷ்டையில் ஆழ்வார். அப்போது பகவான் இவருக்குத் தரிசனம் கொடுப்பார்.

ஒருசமயம் காசியில் கடும் பஞ்சம் நிலவியது. அக்ரஜி நீராட கங்கைக்கு வந்தார். அங்கே மழலை மாறாத ஒரு சிறுவன் அழுது கொண்டிருப்பதைப் பார்த்தார்.

“குழந்தை ஏன் அழறே? யார் கூட வந்தே?” என்று கேட்டார்.

“பசிச்சது. சாதம் கேட்டேன். அம்மா குளிச்ச பிறகு சாப்பிடலாம்னா... கரையிலே என்னை உக்கார்த்திட்டு தண்ணீயிலே இறங்கினா. முங்கி முங்கி எழுந்து வேடிக்கை காண்பிச்சா. இப்போ காணலை. அம்மா வேணும்'' சொல்லி விட்டு மறுபடியும் அழுதான் சிறுவன்.

“சரி. அழக்கூடாது. என்னோடு வா'' என்று மளமளவெனக் குளித்துவிட்டு பையனை மடத்துக்கு அழைத்து வந்து வயிராற சாப்பாடு போட்டார். பின்னர் சமாதானம் செய்து தூங்க வைத்தார்.

அக்ரஜி அப்பையனுக்கு நாபாஜி என்று பெயர் சூட்டினார். மடத்துக்குப் பல மகான்கள் வந்து சொற்பொழிவாற்றுவார்கள். அதையெல்லாம் கேட்பான் சிறுவன். பஜனையில் கூடப் பாடுவான். பூஜை செய்ய ஒத்தாசை செய்வான். நாபாஜி வளர்ந்து வாலிபனானான்.

ஒருநாள் அக்ரஜிக்குப் பகவான் தரிசனம் கிட்டவில்லை. 'என்ன தவறு செய்தேன்' என்று அக்ரஜி வருந்துவது நாபாஜிக்குத் தெரிந்தது. உள்ளே ஓடினான்.

“குருநாதா! கடல் கொந்தளிப்பால் ஒரு வியாபாரியின் கப்பல் மூழ்கும் நிலையில் இருக்கிறது! 'பகவானே! நான் உன் பக்தனில்லையா? நஷ்டம் வராமல் காப்பாற்று. ஐந்தில் ஒரு பங்கை காசி மடத்துக்கு எழுதி வைக்கிறேன்' என்று கண்ணீரோடு பிரார்த்திக்கிறான். பகவான் கூர்மாவதாரம் எடுத்து கப்பலைத் தாங்கிக் கொண்டிருக்கிறார். அதனால்தான் வரத் தாமதமாகிறது. நீங்கள் ஒரு குற்றமும் செய்யவில்லை'' என்று கூறிவிட்டு வாசலில் போய் காவலாக நின்றுகொண்டான்.

அக்ரஜி பிரமித்தார். 'தான் மனத்துக்குள் வருந்தியதை நாபாஜி எப்படி அறிந்துகொண்டான். அப்படியானால் பரந்தாமன் வராததற்காக அவன் சொன்ன காரணமும் உண்மையாயிருக்குமோ? அப்படியானால் எங்கோ கடலில் நடப்பதை நாபாஜி எப்படி அறிந்தான்?' என்று அதிசயித்தவர் மீண்டும் யோகத்தில் ஆழ்ந்தார்.

சிறிது நேரத்தில் திருமால் தோன்றவே அவரிடம் தாமதத்துக்கான காரணத்தைக் கேட்டார். நாபாஜி சொன்ன அதே காரணத்தையே பகவானும் சொன்னார்.



பகவான் மறைந்ததும் அக்ரஜி நாபாஜியிடம், ''இந்த ஞானதிருஷ்டி உனக்கு எப்படி உண்டாயிற்று?" என்று கேட்டார்.

"ஸ்வாமி! தங்களுக்குச் சேவை செய்த புண்ணியத்தாலும், மகான்களின் உபன்யாசங்களைத் தினமும் கேட்பதாலும், பஜனை செய்வதாலும், பகவான் கருணையாலும் இந்தச் சக்தி ஏற்பட்டிருக்க வேண்டும். எல்லாம் தங்களின் அருள்'' என்று பணிவோடு கூறினான் நாபாஜி.



''நாபாஜி! நீ சித்த புருஷன். இந்த அபூர்வசக்தி வீணாகக் கூடாது. பக்தர்களுடைய சரித்திரங்களை ஞானதிருஷ்டியால் கண்டு எழுது. வால்மீகி முனிவரால் இராமாயணம் பிறந்தது. வியாபாரியைப் போல் பல பக்தர்கள் இல்லங்களில் பகவான் விஜயம் செய்து இன்னல்களைத் தீர்த்திருக்கிறார். நான் பெயர்களைச் சொல்கிறேன். உன் மனத்தில் தோன்றும் காட்சிகளை நீ முதலில் உபன்யாசமாகச் சொல். மறுநாள் அதை ஓலையில் எழுதலாம். உன் பக்தியும், சக்தியும் உலகில் நிலைத்திருக்கும்" என்றார் குருநாதர்.

அப்படியே செய்தார் நாபாஜி சித்தர். அவர் இயற்றியதே பக்தவிஜயம் என்னும் பாண்டுரங்க மகாத்மியம்.

ஆர். பொன்னம்மாள்



சார் தபால்

நானே எண்ணெய் விட்டுக் கொண்டிருந்தேன்!

✉ பேச்சுக்கலையைப் பற்றி குமரி அனந்தன் அவர்கள் ரொம்ப அருமையாகக் கூறியிருந்தார். அவரது நிகழ்ச்சிகளை டி.வி.யில் பல முறை பார்த்திருக்கிறேன். எங்களைப் போன்ற மாணவர்களுக்கு மிகவும் பயன் உடையதாக இருந்தது எதிர் கால வழி காட்டி.

– கே. சுந்தர்,
பத்தாம் வகுப்பு,
திண்டுக்கல்.

✉ 'வாயால் கெட்டவன்' படக்கதையைப் படித்து ரசித்தேன். படமும் சரி, கதையும் சரி ரொம்ப நன்றாக இருந்தது. படக்கதைகளை நிறைய எதிர்பார்க்கிறேன்.

– பால. கண்ணன்,
நிம்மேலி, தஞ்சை மாவட்டம்.

✉ பூவண்ணனின் புதிய தொடர்கதை அருமையான தொடக்கம். இளங்கோ, அருள்மொழி, நெடுமாறன் என்று மூன்று மாணவர்களுக்கும் மூவேந்தர்களின் பெயர்களைக் கூறி நினைவூட்டியிருப்பது அருமை. விறுவிறுப்பான தொடக்கம் இளம் தலைமுறையினரை மட்டுமல்ல, பழம் தலைமுறையினரையும் ஈர்க்கக் கூடியது.

– ரா. பொன்ராசன்,
முத்துராமலிங்கபுரம்,
விருதுநகர் மாவட்டம்.

✉ கோகுலத்தில் நிறைய தகவல்கள் இடம் பெறுகின்றன. படிக்க ஆர்வமாக உள்ளது. பெண் பார்க்க வந்த சிங்கம் கதையைப் படிக்கும்போது பயங்கர சிரிப்பாக இருந்தது.

– எல். லாவண்யா,
காந்திபுரம்,
கோவை.

✉ காது கட்டுரை எளிமையாக இருந்தது. நானே தலைக்குக் குளிக்கும் போது எண்ணெய் விட்டுக் கொண்டிருந்தேன். அது எவ்வளவு தவறு என்பதை உணர்ந்துகொண்டேன்.

– க. கார்த்திகா,
ஒன்பதாம் வகுப்பு,
பெண்கள்மேல் நிலைப்பள்ளி,
பாளையங்கோட்டை.

✉ 'பூமியைக் காப்போம்; பூமி நம்மைக் காக்கும்' கட்டுரையைப் படிக்கும்போது ஒரு புறம் ஆச்சர்யமாக இருந்தது. இன்னொரு புறம் நாம் எப்படி பூமியை சுய நலத்துக்காகப் பாழ்படுத்துகிறோம் என்பதை அறிந்த போது வேதனையாகவும் இருந்தது.

– எம். முகம்மது அலி,
நாகப்பட்டினம்.

100 பேருக்கு ஜாமெட்ரி பாக்ஸ் பரிசு!

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், பாண்டிச்சேரி ஆகிய பகுதிகளுக்கான போட்டி. இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும் முதல் 100 வாசகர்களுக்கு ஜாமெட்ரி பாக்ஸ் வழங்க இருக்கிறோம். போட்டியில் கலந்து கொள்வதுடன் விரைவில் அனுப்பியும் வைக்க வேண்டும்.

இந்த மாதப் போட்டி: மரம் சம்பந்தப்பட்ட விடுகதைகள். மேற்கண்ட மாவட்டங்களுக்கு அடுத்த மாதமும் போட்டி தொடரும். போட்டியில் கலந்து கொள்ளுங்கள். பரிசை வெல்லுங்கள்!

புதிர் உலகம்

I ஒரு விவசாயி ஆடு, மாடு, கோழி இவற்றை வளர்த்து வந்தார். உங்களிடம் எத்தனை ஆடு, மாடு, கோழிகள் உள்ளன எனக் கேட்டபோது அவர், என்னிடம் உள்ளவற்றில் 2 தவிர மற்றவை ஆடுகள், 2 தவிர மற்றவை மாடுகள்; 2 தவிர மற்றவை கோழிகள் என்று பதிலளித்தார் எனில் அவரிடம் உள்ள கோழி, ஆடு, மாடுகள் எத்தனை?

— நா. பாண்டியம்மாள்,
எட்டாம் வகுப்பு,
சேதுமாணிக்கம்
உயர்நிலைப்பள்ளி, மேலச்சீத்தை,
இராமநாதபுரம் மாவட்டம்.

II மூன்று பெண்மணிகள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா இரண்டு மகள்கள் உள்ளனர். அனைவரும் சாப்பிட ஹோட்டலுக்குச் சென்றனர். அங்கு இருந்ததோ ஏழு இருக்கைகள் மட்டுமே. ஆனாலும் ஒவ்வொருவரும் தத்தமது இருக்கைகளில் அமர்ந்து உணவு உண்டனர். இடப்பற்றாக் குறையே வரவில்லை. இது எவ்வாறு என்பதை நீங்கள் அறிவீரா?

— கே. சங்கரகிருஷ்ணன்


III எங்கள் வகுப்பு தலைவர் பதவிக்கு நானும் என் நண்பனும் போட்டியிட்டோம். வகுப்பிலுள்ள மொத்த மாணவர்களில் பாதிப்பேர் எனக்கும், 3ல் 2 பங்கு பேர் என் நண்பனுக்கும் வாக்களித்தனர். 10 பேர் இருவருக்கும் வாக்களித்தனர். 6 பேர் பள்ளிக்கு வரவில்லை எனில் எங்கள் வகுப்பில் மொத்த மாணவர்கள் எத்தனை பேர்?

— பெ. நடராஜன்,
எட்டாம் வகுப்பு,
சேதுமாணிக்கம்
உயர்நிலைப் பள்ளி,
மேலச்சீத்தை,
இராமநாதபுரம்
மாவட்டம்.


IV அபூர்வமான எலுமிச்சை மரமொன்று ஒரு குளத்தின் நடுவில் இருக்கிறது. அந்தக் குளத்தில் ஏராளமான முதலைகள், பாம்புகள், விஷ ஜந்துக்கள் எல்லாம் வாழ்கின்றன. எலுமிச்சை மரத்தில் குரங்கு ஒன்றும் வாழ்கிறது. நீங்கள் வேறெதுவும் செய்ய வேண்டாம். அந்த மரத்திலிருந்து எலுமிச்சம் பழங்களைப் பறிக்க வேண்டும்! குளத்தில்தான் இறங்க முடியாதே... என்கிறீர்களா? அதற்குத்தான் வழியைக் கண்டுபிடிக்க வேண்டும்! என்ன வழி?

— ப. காளிதாசன்,
நீர்விளாங்குளம்.

விடை: 36 ஆம் பக்கம்



வெண்டைக்காய் சாப்பிட்டால் அறிவு வளருமா?



● ஆர். மருது பாண்டியன், குலசேகர பட்டினம்.

? வெண்டைக்காய் சாப்பிட்டால் அறிவு வளரும் என்று கூறுகிறார்களே... உண்மையா, டாக்டர்?

! உண்மையில்லை மருது பாண்டியன்! வெண்டைக்காயில் வைட்டமின் மற்றும் தாதுச்சத்துக்கள் மிகுந்துள்ளன. இதனால் வெண்டைக்காய் உடல் நலனுக்கு நல்லது. மற்றபடி வெண்டைக்காய்க்கும் அறிவு வளர்வதற்கும் சம்பந்தமில்லை. அறிவு வளர்வதற்கு நாம் செய்ய வேண்டிய முதல் வேலை, மூளைக்குள் நிறைய செய்திகளைப் பதிவு செய்வதுதான். பிறகு, அவற்றை அடிக்கடி நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு மூளையை மீண்டும் மீண்டும் பயன்படுத்தும்போதுதான் அறிவு வளரும்.



● க. துரைராமன், கடம்பரவாழ்க்கை.

? குறைந்த அழுத்தம் என்றால் என்ன? எப்படி தவிர்ப்பது?

! சாதாரணமாக ஒருவருக்கு 120/80 மி.மீ பாதரச அளவு என்ற நிலையில் ரத்த அழுத்தம் இருக்க வேண்டும். வயதின் காரணமாக இந்த அளவில் சிறிய மாற்றம் இருக்கலாம். 100/70 அல்லது அதற்கும் கீழே ரத்த அழுத்தம் இருந்தால் அது குறைந்த அழுத்தம் (Hypotension) என்று அழைக்கப்படும். குறைந்த ரத்த அழுத்தத்தினால் பெரிய பாதிப்பு எதுவும் ஏற்படாது. ஒரே இடத்தில் அதிக நேரம் நின்று கொண்டிருந்தால் கிறுகிறுப்பு, மயக் கம், படபடப்பு போன்றவை வரலாம். சிறிது நேரம் படுத்து ஓய்வெடுத்தால் சரியாகிவிடும். அடிக்கடி இம்மாதிரியான தொந்தரவுகள் வருமானால் பிற்காலத்தில் சிறுநீரகம் பாதிக்கப்படலாம். இதனைத் தவிர்க்க மருத்துவச்சிகிச்சை தேவைப்படும். குறைந்த அழுத்தம் உள்ளவர்கள் உணவில் உப்பைச் சிறிது அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும். முறையான, தொடர்ச்சியான உடற்பயிற்சியும் அவசியம். மருத்துவரின் ஆலோசனைப்படி சிகிச்சை பெற்றுக்கொள்வது நல்லது.

● ப. குமரேசன், பல்லடம்.

? ஒருவருக்குத் தலையில் அடிபட்டு விட்டால், அவருக்கு மூளையில் அடிபட்டுள்ளதா, இல்லையா என்பதை எவ்வாறு தெரிந்து கொள்வது?

! தலையில் அடிபட்டவருக்கு மூளையிலும் அடிபட்டிருந்தால் சில நேரங்களில் அறிகுறிகள் வெளிப்படையாகத் தெரியும். தலைக்காயத்திலிருந்து ரத்தம், திரவம் அல்லது மூளைத்திசுக்கள் வெளியேறும். மூக்கு, காது ஆகியவற்றிலிருந்தும் ரத்தம் வழியலாம் அல்லது கசியலாம். வாந்தி, தலைச்சுற்றல், மயக்கம் வரலாம். தலையில்

டாக்டர் கு. கணேசன்

கேட்கட்டுமா டாக்டர்?

வெட்டுக்காயம் எதுவுமில்லாமல் சுபாவத்தில் – அதாவது மண்டையோட்டில் – அடிபடாத போதும் மூளையில் காயம் ஏற்பட்டிருக்கலாம். அப்போது அடிபட்ட நபர் கை கால் அசைவின்றி இருந்தால், பேச இயலாமல், பார்க்க இயலாமல் அல்லது கேட்க இயலாமல் இருந்தால் அவருக்கு மூளையில் அடிபட்டுள்ளது என்று தெரிந்துகொள்ளலாம். சமயங்களில் மூளையில் காயம் பட்டிருந்தாலும் அறிகுறிகள் உடனடியாக வெளியில் தெரியாது. காயம் பட்ட உடனே தெளிவான மனநிலையில் இருந்து, நேரம் ஆக ஆக குழப்பமான மனநிலைக்கு அந்த நபர் உட்படுவாரானால் அல்லது நடந்த நிகழ்ச்சிகளை மறப்பாரென்றால் அவருக்கு மூளையில் அடிபட்டுள்ளது என்று ஊகித்து விடலாம்.

• **அ. முத்துமயில், மதுரை – 20.**

?குடல்வால்நோய் என்றால் என்ன? இது வராமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?

! நம் வயிற்றில் சிறுகுடலும் பெருங்குடலும் இணைகின்ற இடத்தில், சிறு பச்சை மிளகாய் அளவிற்குத் தொங்கிக் கொண்டிருக்கும் உறுப்புதான் குடல்வால் (Vermiform Appendix). இந்த உறுப்பால் நமக்கு எவ்வித பலனும் இல்லை என்றாலும் பலருக்கு இதனால் தொல்லைகள் ஏற்படுவது நடைமுறை. நம் சாப்பாட்டில் இருக்கின்ற கல், குடலில் இருக்கின்ற புழுக்கள், ரத்தத்தில் இருக்கின்ற பாக்டீரியாக்கள் ஆகியவை தனித்தனியாகவோ, எல்லாம் சேர்ந்து கூட்டணி அமைத்துக் கொண்டோ இந்த வாலுக்குள் புகுந்து விட்டால், அங்கு அழற்சி ஏற்பட்டு, புண் உண்டாகி, வீங்கிவிடும். அப்போது வயிற்றுவலி, காய்ச்சல், வாந்தி ஆகிய தொல்லைகள் ஏற்படும். இதனைக் 'குடல்வால் அழற்சி நோய்' (Appendicitis) என்கிறோம். மருத்துவரின் நேரடி ஆலோசனையின் பேரில் தகுந்த நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளைச் சாப்பிட, நோய் குணமாகும். என்றாலும், ஒரு சிலருக்கு இந்த நோய் அடிக்கடி தொல்லை





தர வாய்ப்புள்ளது. அம்மாதிரி நேரங்களில் அறுவைசிகிச்சை செய்து, குடல்வாலை வெட்டி எடுத்துவிட்டால் அதற்குப் பிறகு குடல்வால் நோய் வராது. இந்த நோய் வராமல் தடுக்கத் தடுப்பூசியோ, தடுப்பு மருந்துகளோ இல்லை என்றாலும் சுயசுத்தம் மற்றும் சுற்றுப்புற சுகாதாரம் காப்பாற்றப்படுமானால் பெரும்பாலும் இந்த நோய் வராது என நம்பலாம்.

• **இரா. கலைவாணி, பாண்டிச்சேரி**

? நாம் அழும்போது ஏன் கண்ணீர் பெருகுகிறது?


! இது மூளை இடும் ஆணை! நாம் மிகுந்த வருத்தத்துடனோ, மகிழ்ச்சியுடனோ இருக்கும்போது அந்த மனநிலையை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்த நினைக்கிறது மூளை. உடனே அது கண்ணீர்ச்சுரப்பிகளுக்குக் கண்ணீரை அதிகமாகச் சுரக்கச் சொல்லி ஆணை பிறப்பிக்கிறது. இதன் விளைவாக கண்கள் 'பொலபொல'வெனக் கண்ணீரைச் சுரக்கின்றன. நம் மனநிலை மாறியதும் கண்ணீர் சுரப்பதும் நின்று விடுகிறது.


9 ஆளப்பிறந்தவன்


கதை: ராஜி   படம்: லலிதா




இதுவரை யார் கண்ணிலும் படாமல் வந்தாச்சு. அடுத்த அறையில்தான் அந்த மணிமகுடம் இருக்கணும். அதை எப்படியும்...
அரண்மனைக்குள் தந்திரமாக நுழைந்த குப்பன் மணிமுடியைத் தேடிச் சென்றான்.
சிறிது நேரத்தில் –
இளவரசே! மணிமுடியை எங்காவது எடுத்து வைத்திருக்கிறீர்களா?
ஏன்?
நான் வைத்த இடத்தில் அதைக் காணவில்லை.
காண வில்லையா...?


ஆமாம். இப்படி ஏதாவது நிகழும் என்றுதான் அதைப் பத்திரமாக வைக்க எண்ணினேன்.
மணிமுடி அரண்மனையை விட்டுப் போக விடமாட்டேன். கவலைப்படாதீர்கள்.


விருந்து முடிந்தது.
வயிறு நிறையச் சாப்பிட்டிருக்கிறோம். அது ஜீரணமாக அரண்மனைக் குள்ளேயே ஒளிந்து விளையாடலாமா?
நல்ல யோசனை!
விளை யாடலாம்.


ஜெயசிம்மனும் நண்பர்களும் அரண்மனையில் பல்வேறு இடங்களில் பதுங்கிக் கொண்டனர். அப்போது குப்பன் –
சே, சே! என்ன பயம்? இவை எல்லாம் இரும்புக் கவசம் அணிந்த பொம்மைகள் தானே!
இந்த ஜன்னல் வழியாக ஏறி குதித்து வெளியே சென்று விடலாம்.
ஐயோ... யார் இது? என்னை இப்படி... நான் திருடவில்லை. ஐயோ... அம்மா...

(தொடரும்)

அமைச்சர் ஆனந்த தேவர் எதிரே பத்து வயது சிறுமி பாவை கவலை தோய்ந்த முகத்தோடு நின்று கொண்டிருந்தாள்.


"நீ... நீ... சின்னப்பனின் மகள் தானே?" மந்திரி கேட்டார்.

"ஆமாங்க ஐயா!"

"உனக்கு என்ன வேண்டும்?"

"ஐயா! என் தந்தை நல்லவர். நிரபராதியான அவரைக் குற்றவாளி என்று கூறி மன்னர் சிறையில் அடைத்துவிட்டார். தயவு செய்து நீங்கள்தான் மன்னரிடம் சொல்லி என் தந்தையை விடுவிக்க வேண்டும்." கரங்களைக் குவித்து வேண்டினாள்.

"எனக்கு உடம்பு சரியில்லாமல் இருந்ததால் நான்கு நாட்களாக நான் அரசவைக்குச் செல்லவில்லை. அதனால் நடைபெற்ற எந்தச் செய்தியும் எனக்குத் தெரியாது. மன்னரைப் பார்க்கத்தான் கிளம்பிக் கொண்டிருக்கிறேன். அவரிடம் கேட்டு செய்தியை அறிந்து கொள்கிறேன். நீ




கவலைப்படாமல் போய்வா" என்றார் பரிவுடன்.

பாவை நம்பிக்கையோடு சென்றுவிட்டாள்.

மன்னரை சந்தித்த போது சின்னப்பன் பற்றி அமைச்சர் கேட்டார். உடனே மன்னர் பூபேஸ்வரன் விரிவாகப் பதில் சொல்லலானார் :

"ஆனந்த தேவரே! போன மாதம் அரசி ரத்தினேஸ்வரி குளிக்கச் செல்லும்போது கழுத்தில் அணிந்திருந்த காசு மாலையைக் கழற்றி குளத்தின் மேல் படிக்கட்டின் மீது வைத்துக் குளித்துக்

இரண்டு பொற்காசுகள்!



கொண்டிருந்தார். குளித்துவிட்டுப் பார்த்தால் காசு மாலையைக் காணவில்லை. தாதியர்கள் தேடியும் கிடைக்கவில்லை. நந்தவனக் காவலன் முத்து, நந்தவனத்தை விட்டு வெளியே தேட ஆரம்பித்தான். அப்போது சின்னப்பன் கையில் காசு மாலையோடு எதிரே வந்து கொண்டிருந்தான். அது அரசியின் காசு மாலைதான். 'நீ அரசியின் காசு மாலையை ஏன் திருடினாய்?' என்று முத்து கோபத்தோடு கேட்டான். அதற்கு சின்னப்பன், 'ஐய்யய்யோ நான் திருடவில்லை. இது ராணியின் மாலை என்று எனக்குத் தெரியாது தென்னை மரத்திற்குக் கீழே கிடந்தது' என்று கூறி காசு மாலையை முத்துவிடம் கொடுத்து விட்டான்.

"காசு மாலையை வாங்கிப் பார்த்த முத்து அதில் இரண்டு தங்கக் காசுகள் குறைந்திருப்பதைப் பார்த்தான். உடனே சின்னப்பனை அழைத்துக் கொண்டு முத்து என்னிடம் வந்தான். சின்னப்பனைச் சோதனை போட்டதில் அவனிடம் பொற்காசுகள் இல்லாததாலும், தான் குற்றமற்றவன் என்று கண்களில் நீர் வழிய கூறியதாலும் அவனை விட்டுவிட்டேன். இந்தச் சம்பவம் நடந்த அன்று தாங்கள் ஊரில் இல்லை.

"இரண்டு நாட்களுக்கு முன்பு சின்னப்பன் இரண்டு பொற்காசுகளுடன்

த. ஜானகி

கடை வீதியில் உள்ள ராசப்பன் என்ற பொற்கொல்லரிடம் நகை செய்ய வந்திருக்கிறான். அப்போது நம் வீரர்கள் அவனைக் கையும் களவுமாகப் பிடித்துவிட்டனர். அந்த இரண்டு பொற்காசுகளும் அரசியின் காசுமாலையில் காணாமல் போன பொற்காசுகள்தான். அதனால்தான் அவனைச் சிறையில் அடைத்திருக்கிறேன்" என்று கூறி முடித்தார் மன்னர் பூபேஸ்வரன்.

"அரசே! சின்னப்பன் என்ன கூறுகிறான்?" - அமைச்சர்.

"இப்பவும் தான் நிரபராதி என்றுதான் சொல்லிக் கொண்டிருக்கிறான். சின்னப்பனின் பக்கத்து வீட்டுக்காரன்தான் பொற்கொல்லன் ராசப்பன். ராசப்பனையே கூப்பிட்டு விசாரித்தேன். 'சின்னப்பன் நல்லவன் இல்லை, மிகவும் மோசமானவன். அவன்தான் ராணியின் காசு மாலையிலிருந்து இரண்டு காசுகளைத் திருடியிருக்கிறான். என்னிடம் காசுகளைக் காண்பித்தபோது அது காசு மாலையின் பொற்காசுகள் என்று தெரிந்ததால் மன்னராகிய தங்களுக்குச் செய்தியைச் சொல்லி அனுப்பினேன். உடனே வந்ததால் தங்கள் வீரர்கள் அவனை கையும் களவுமாகப் பிடித்துவிட்டனர்' என்று ராசப்பன் கூறினான்." - மன்னர் சொல்லி முடித்தார்.

சின்னப்பன் திருடியிருப்பான் என்று மந்திரிக்குத் தோன்றவில்லை. உண்மையில் நடந்தது என்ன என்பதைத் தீவிரமாக விசாரிக்க வேண்டும் என்று தீர்மானித்தார். உடனே சிறைச்சாலைக்குச் சென்று சின்னப்பனை விசாரித்தார். பிறகு அவன் கொடுத்த தகவலின்படி விசாரணையைத் தொடர்ந்தார். ஒரு வாரம் நடத்திய விசாரணையில் அவருக்கு உண்மை தெரிய வந்தது. உடனே மன்னரை அவரது அறையில் சந்தித்தார்.

"அரசே! சிறையில் இருக்கும் சின்னப்பன் உண்மையிலேயே குற்றமற்றவன். அவனை விடுதலை செய்ய தாங்கள் ஆணை பிறப்பிக்க வேண்டும்" என்றார்.

"சின்னப்பன்... நிரபராதியா?... சற்று விளக்கமாகச் சொல்லுங்கள்?" மன்னர் கேட்டார்.

மந்திரி கூறலானார் :



"அரண்மனை குளத்தின் மேல் படிக்கட்டில் காசு மாலையைக் கழற்றி வைத்துவிட்டு ராணி நீராடிக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த குரங்கு சூரிய ஒளியில் மின்னும் காசு மாலையைப் பார்த்துவிட்டு அதை எடுத்துக் கொண்டு நந்தவனத்தைவிட்டு வெளியே சென்று மரத்திற்கு மரம் தாவிச் சென்று கொண்டிருந்தது. தாவிக் கொண்டிருந்தபோது இன்னொரு குரங்கு அந்தக் காசு மாலையைப் பார்த்துவிட்டது. அதற்கு அந்தக் காசுமாலை மிகவும் பிடித்துவிட்டது.

"உடனே இரண்டாவது குரங்கு முதல் குரங்கின் அருகில் வந்து காசுமாலையைப் பிடித்து இழுக்க ஆரம்பித்தது. இரண்டு குரங்குகளும் காசு மாலையை இழுத்த இழுப்பில்தான் அதிலிருந்து இரண்டு பொற்காசுகள் பிய்ந்து கீழே கண்களை மூடிக்கொண்டு தியானத்தில் ஆழ்ந்திருந்த துறவியின் பிட்சைப் பாத்திரத்திற்குள் விழுந்தன.

"இதைக் கவனிக்காத குரங்குகள் மீண்டும் மரத்திற்கு மரம் தாவி கடைசியில் தென்னை மரத்தின்மீது விளையாடிக் கொண்டிருந்தபோதுதான் தவறி, காசுமாலை தரையில் விழுந்துவிட்டது. அந்தச் சமயம் கோவிலுக்குச் சென்றுவிட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்த சின்னப்பன் கண்களில் காசு மாலை பட்டது. குனிந்து எடுத்தான். சுற்றும் முற்றும் பார்த்தான். மரத்தின் மேலே உள்ள குரங்குகளைத் தவிர மனிதர்கள் யாரும் கண்களில் தென்படவில்லை. இது யாருடைய நகையோ தெரியவில்லை. தொலைத்தவர்கள் எங்கே தேடிக் கொண்டிருக்கிறார்களோ... எப்படியும் அவர்களைக் கண்டுபிடித்து நகையை அவர்களிடம் சேர்ப்பித்துவிட வேண்டும் என்று எண்ணியபடி சின்னப்பன் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே வந்தான்.

"அந்தச் சமயம்தான் காசுமாலையைத் தேடியபடி நந்தவனக் காவலன் முத்து



அங்கு வந்து கொண்டிருந்தான். எதிரே வந்த முத்து சின்னப்பன் கையில் உள்ள காசு மாலையைப் பார்த்துவிட்டு உங்களிடம் அழைத்துச் சென்றான். விசாரணை நடத்திய நீங்களும் சின்னப்பன் நிரபராதி என்று கூறி அனுப்பி விட்டீர்கள்.

“தியானத்திலிருந்து கண் விழித்த துறவி தமது உணவுப் பாத்திரத்தில் இரண்டு பொற்காசுகள் இருப்பதைக் கண்டு திகைத்தார். நடந்ததைத் தம் ஞான திருஷ்டியினால் அறிந்து கொண்டார். ‘துறவியாகிய எனக்கு இப்பொற்காசுகள் வேண்டாம் யாருக்காவது கொடுத்துவிட வேண்டும்’ என்று தீர்மானித்தபடி பிட்சை எடுக்கச் சென்றார். அன்று ஓர் ஏழை தனக்கு என்று வைத்திருக்கும் உணவை அப்படியே துறவிக்குக் கொடுத்து விட்டான். தான் பட்டினியாக இருந்த நிலையிலும் துறவியாகிய தமக்குச் சாப்பாடு போட்ட அவனது பெருந்தன்மையை எண்ணி நெகிழ்ந்தார். உடனே துறவி இரண்டு காசுகளையும் அந்த ஏழையிடம் கொடுத்துவிட்டார்.

“இரண்டு பொற்காசுகளைப் பெற்றுக் கொண்ட ஏழைக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. உடனே மளிகைக் கடைக்குச் சென்று தன் குடும்பத்திற்குத் தேவையான உணவுப் பொருட்களை அந்த இரண்டு பொற்காசுகளைக் கொடுத்து வாங்கினான்.

“மளிகை கடைக்காரர் அந்த இரண்டு பொற்காசுகளை எடுத்துக் கொண்டு வட்டி வியாபாரம் செய்யும் செல்வந்தர் வடிவேலர் வீட்டிற்குச் சென்றார். தான் கொடுக்க வேண்டிய பாக்கியான இரண்டு பொற்காசுகளை வடிவேலரிடம் கொடுத்துத் தன் கடனை அடைத்துவிட்டார்.

“இரண்டு நாட்கள் சென்றன. அன்று ஆடிப் பெருக்கு. எனவே வடிவேலர் தன் ஒரே மகனான சந்தனுவை ஆற்றில் குளிக்கத் தன்னுடன் அழைத்துச் சென்றார். ஆற்றில் குளிக்கும்போது சந்தனு வெள்ளத்தால் இழுத்துச் செல்லப்பட்டான். அவனுக்கு நீச்சல்

தெரியாது. வடிவேலர் தன் மகளைக் காப்பாற்றும்படி அலறினார். அந்தச் சமயம் அங்கு குளித்துக் கொண்டிருந்த சின்னப்பன் தன் உயிரைப் பற்றிக்கூட கவலைபடாமல் கஷ்டப்பட்டு, போராடி சந்தனுவைக் காப்பாற்றிவிட்டான். தன் அருமை மகளைக் காப்பாற்றியதற்காக சின்னப்பன் மறுத்தும் கேட்காமல் இரண்டு பொற்காசுகளை எடுத்து அவனிடம் கொடுத்து விட்டார்.

"தனக்குக் கிடைத்த இரண்டு பொற்காசுகளோடு வீடு திரும்பிய சின்னப்பன் தன் மனைவியிடம் நடந்ததைக் கூறி பொற்காசுகளைக் கொடுத்தான்.

''நம் மகள் பாவைக்கு ஒரு சங்கிலி செய்துவிடலாம்.'' என்று அவன் மனைவி கூறினாள். தன் மனைவி கூறிய யோசனை சரி என்று படவே சின்னப்பன் தன் பக்கத்து வீட்டுக்காரனான பொற்கொல்லன் ராசப்பன் வீட்டிற்குச் சென்றான்.

''ராசப்பன்தான் ராணி ரத்தினேஸ்வரிக்குக் காசு மாலை செய்து கொடுத்திருந்தான். சின்னப்பன் காட்டிய பொற்காசுகளைப் பார்த்ததும் அது ராணியின் காசு மாலையில் இருந்த காசுகள்தான் என்று எளிதில் கண்டுபிடித்துவிட்டான். வெகு நாட்களாகவே ராசப்பனுக்கு சின்னப்பன்மீது பொறாமை. சின்னப்பனுக்கு இரண்டு பொற்காசுகள் கிடைத்த விவரம் ராசப்பனுக்குத் தெரியும். இருந்தும் அவனை மன்னரிடம் மாட்டி வைக்க கடைவீதியில் உள்ள தன் கடைக்கு தன்னோடு வரும்படி கூப்பிட்டான். உங்களுக்கு ஆள் அனுப்பி அரசாங்க வீரர்கள் சின்னப்பனை கையும் களவுமாகப் பிடிக்க ஏற்பாடு செய்தான்.

''அரசே! உண்மையிலேயே நடந்தது இதுதான். துறவியிலிருந்து வடிவேலர்... ஏன் ராசப்பன் உள்பட அனைவரும் நடந்ததைக்கூறத் தயாராக இருக்கின்றனர். பொறாமையினால் நல்லவனான சின்னப்பனை மாட்டி வைத்தது தவறு என்று ராசப்பன் உணர்ந்து வருந்துகிறான். அனைவரையும் சாட்சி சொல்ல அழைத்து வரட்டுமா?'' - மந்திரி.

''வேண்டாம் மந்திரியாரே! இப்பொழுது தான் எனக்கும் உண்மை புரிகிறது'' என்றார்.

"மன்னரே! ஒரு செயலை செய்வதற்கு முன்பு அதைப்பற்றி நன்கு அலசி ஆராய்ந்து செய்ய வேண்டும். அவசரத்திலும் ஆராயாமலும் எடுக்கப்படும் முடிவு நன்மை தராது. ஒரு குற்றவாளியாவது தப்பிக்கலாம். ஆனால் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது. எனவே தாங்கள்..."

''இப்பொழுதே நிரபராதி சின்னப்பனை விடுவிக்க ஆணை இடுகிறேன்!''

மன்னரின் ஆணை மந்திரிக்கு நிறைவைத் தந்தது.



புதிர் உலக விடைகள்!

I) ஆடு 1, மாடு 1, கோழி 1 மொத்தம் 3.

II) முதல் பெண்மணி பாட்டி. மற்ற இரு பெண்மணிகள் அவருடைய மகள்கள். அந்த இரு மகள்களுக்கும் தலா இரண்டு மகள்கள். அதாவது நான்கு பேத்திகள். எனவே மொத்தம் ஏழு நபர்கள். எனவே, ஏழு இருக்கைகளும் அவர்களுக்குச் சரியாக இருந்தது.

III)
மொத்தம் 24 பேர்.
என்னை ஆதரித்தது = 12-10 = 2
நண்பனை ஆதரித்தது = 16-10 = 6
இருவரையும் ஆதரித்தது = 10 = 10
18
பள்ளிக்கு வராதவர்கள் 6
24

IV) கரையிலிருந்து குரங்காரை நோக்கி ஒரு கல் எறிந்தால் போதும் - குரங்கார் மரத்திலிருந்து எலுமிச்சம் பழத்தைத் தான் பறித்து எறிவார். நமக்கு எந்தச் சிரமமும் இல்லாமல் பழம் கிடைத்து விடும்!

மஞ்சள் மகிமை!

நாலு பேர் விளையாடலாம். நாலே சோழிகள் போதும். சோழிகளைக் குலுக்கி வீசினால் 1 - 2 - 3 - 4 - 8 இவற்றில் ஏதாவது ஒரு எண் கிடைக்கும். அந்த எண்ணிக்கையின்படி முன்னேறிப் போக வேண்டும். முதலில் 'ஸ்டார்ட்' என்ற இடத்தில் வில்லை இருக்க வேண்டும். தாயம் (ஒன்று) விழுந்தால்தான் தொடங்க வேண்டும். ஒருவருக்கு 1 விழுந்தாலும், 8 விழுந்தாலும், எது விழுந்தாலும் ஒரு சான்ஸ்தான்.

இங்குள்ள நான்கு சதுரங்களை ஒரு அட்டையில் ஒட்டி 4 தனித் தனி வில்லைகளாக வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொருவருக்கும் ஒன்று.

விளையாடுவது எப்படி?

நீங்கள் போகும் வழியில் மஞ்சள் கட்டத்துக்கு வந்துவிட்டால் அந்த எண்படி கீழ் காணும் 'ஆக்ஷன்' என்னவோ அதைச் செய்து காட்ட வேண்டும். எனவே மஞ்சள் கட்டங்களெல்லாம் 'செயல் கட்டங்கள்'! மஞ்சள் கட்டத்துக்கு வருபவர்கள் அதிலுள்ள எண் உங்களை என்ன செய்யச் சொல்கிறதோ அதை அந்த வில்லைக்குச் சொந்தமானவர் செய்து காட்ட வேண்டும். எல்லோரும் சிரிக்கலாம். யாரும் கோபித்துக் கொள்ள கூடாது.

மஞ்சள் மகிமையின் விவரம் :- இந்தக் குறிப்புகளை விளையாடும்போது பக்கத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். செயல்கள் எல்லாமே நாலு வினாடிகள்தான்.



2. ஏதாவது ஒரு பாட்டின் முதலடி பாடு.
7. ஒரு பழமொழி சொல்லு.
10. பரத நாட்டியம் ஆடு.
12. தாத்தா மாதிரி நடந்து காட்டு.
15. ஸ்கூட்டர் ஓட்டுவதுபோல் பாவனை செய்.
18. ஸ்கூல் டீச்சர் மாதிரி நடித்துக் காட்டு.
22. வாய்விட்டுச் சிரித்துக் காட்டு.
24. ஏதாவது ஒரு குறள் சொல்லு.
27. குரங்கு சேஷ்டை செய்.
31. கழுதை மாதிரி கத்து.
33. யானை மாதிரி நடந்து வா.
35 ஏதாவது இரண்டு பறவைகள் போல் சத்தம் செய்.
38. 'நான் தச்ச சட்டை பச்சை. நீ தச்ச சட்டை சிகப்பு' என்று வேகமாக 4 தடவை சொல்.
43. விடுகதை ஒன்று சொல்.
46. பத்தடி வட்டத்துக்கு நொண்டியடிக்க வேண்டும்.
48. மைக்கேல் ஜாக்சன் மாதிரி ஆடிக்காட்டு.
50. ஒரு தாலாட்டுப் பாட்டின் முதலடி மட்டும் பாடு.
53. 'யே!' என்று கத்து.

(53க்குச் சென்றுதான் வெற்றியடைய வேண்டும். ஆக இந்தக் கட்டத்தைத் தொடும் வரை முந்தின நிலையில் நின்று கொண்டே உங்கள் முறை வரும் போதெல்லாம் சோழி வீச வேண்டும். 53 வந்த உடனேயே "யே!" என்று கூவிவிட்டு 'வெற்றி' வளையத்துக்குப் போய் விடலாம்.)

4 பேரும் வெற்றி வட்டத்துக்கு வரும் வரை விளையாட வேண்டும். 'கேம்' முடிந்த உடன் முதலில் வெற்றி வளையத்தை அடைந்தவர் மற்ற மூன்று பேருக்கும் தனித்தனியாக ஏதாவது ஒரு 'ஆக்ஷன்' சொல்லி அதைச் செய்யச் சொல்ல வேண்டும்!

சரி இப்போது 40-ஆம் பக்கத்துச் சென்று விளையாடுங்கள்.


- ஜெயராஜ்

"படிப்புல 'லோ'வா

வக்கீல்

சமூக அறிவியல் ஆசிரியர், 'எதிர்காலத்தில் நீ என்னவாக வர ஆசை' என்று எல்லா மாணவ - மாணவியரிடமும் கேட்டுக் கொண்டு வந்தார். சுமாராக படிக்கும் ஒரு மாணவி, "நான் வக்கீலாக வருவேன் சார்" என்றாள் உற்சாகத்தோடு. அதற்கு ஆசிரியர், "படிப்புல 'லோ'வா இருக்கிற நீ எப்படி 'லா' படிச்சு வக்கீலா வருவே?" என்று கேட்டார். அம்மாணவி, "உன்னால 'இயலா'துன்னு நீங்களே சொன்னா என் மனசு 'தாளா'து சார். கிண்டலா ஏதாவது சொன்னாலும் சாதிக்கும் உத்வேகம் வந்துவிட்டது எனக்கு!" என்றாள் சற்றே சோகம் கலந்த புன்னகையோடு. உடனே ஆசிரியர், "ஸாரிம்மா, நீ உலகப் புகழ் லாயராக வர என் வாழ்த்துகள்" என்று கூறி உட்கார வைத்தார்.

- ராமகிருஷ்ணன்,
காயக்காடு.



பையா

கடந்த ஜனவரி மாதம் மத்தியபிரதேசம் இந்தூரில் நடைபெற்ற தேசிய மாணவர் படையின் தேசிய ஒருமைப்பாடு முகாமில் கலந்து கொள்ள எங்கள் பள்ளியிலிருந்து ஏழு பேர் சென்றிருந்தோம். முகாமில் இருந்தவர்களை 'பையா' (அண்ணன்) என்று கூப்பிட்டோம். முகாம் முடிந்து சென்னை வந்து நெல்லை எக்ஸ்பிரஸ்ஸைப் பிடிக்க எக்மோரில் காத்திருக்கையில் வடமொழியின் அழுத்தமான உச்சரிப்பு

யார்?


தமிழ் பாட வேளை. எங்கள் தமிழ் ஆசிரியர் செய்யுள் நடத்திக் கொண்டிருந்தார். அவர் எப்போதும் ஒரு வரி படித்து அதற்கு விளக்கம் தருவார். அப்போது "மணிவண்ணனை ஈர்த்த மாந்தமிழ் மொழி" என்று சொல்லிவிட்டு "மணிவண்ணன் யார்?" என்று ஆசிரியர் எங்களிடம் கேட்டார். உடனே குறும்புக்கார மாணவன் ஒருவன் "சினிமாவில் வரும் நடிகர்" என்று கூறவே நாங்கள் கொல் என்று சிரித்து விட்டோம்! உடனே ஆசிரியர் "பாடத்தைப் பற்றி தெரியாவிட்டாலும் சினிமாவைப் பற்றி நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறாய்" என்று பாடத்தைக் கவனிக்கும்படி கோபத்துடன் புத்திமதி கூறினார்.

- ஆ. கேப்டன் சிவசக்தி, பத்தாம் வகுப்பு, அ.மே.நிலைப் பள்ளி,
அம்பலூர், வேலூர்.



வராத என் தோழி அங்கிருந்த ஒருவரை எதற்காகவோ கூப்பிடுகையில், முகாம் நினைவில் 'பையா' என்று கூப்பிட்டு விட்டாள். "ஏம்மா இவ்வளவு பெரிய ஆளான என்னை பையான்னு சொல்றியே?" என்று அவர் கோபிக்க நாங்கள் அனைவரும் சிரித்துவிட்டோம். பிறகு அவரிடம் விளக்கினோம்.

- சு. துர்கா காத்யாயனி,
ஒன்பதாம் வகுப்பு, புனித
அலாய்சியஸ் மகளிர் மேல் நிலைப்
பள்ளி, தூத்துக்குடி.



இருக்கிற நீ எப்படி லா’ படிப்பே?”

எங்கள் பள்ளியில் நடந்தது

அரை நாள்...

அன்று சனிக்கிழமை மதியம் 1 மணி வரைதான் பள்ளி நேரம். எல்லோரும் பஸ் நிலையத்திற்கு வந்து பஸ்ஸிற்காகக் காத்திருந்தோம். ஆறாம் வகுப்பு மாணவன் ஒருவன் அழுது கொண்டிருந்தான். என்னவென்று விசாரித்ததில் அன்று அரை நேர வேலை நாள் என்பதால் வழக்கமாக வாங்கி வரும் பணத்தில் பாதிதான் வாங்கி வந்திருக்கிறான். இப்போது ஊர் திரும்ப பணம் போதவில்லை. அரை நாள் வேலை என்றாலும் பஸ்ஸுக்கு முழுக் கட்டணம் என்பதை மறந்துவிட்டான் போலும். எங்கள் ஆசிரியர் அவனுக்குப் பணம் கொடுத்து அவனது அழுகையை நிறுத்தினார்.




- ஹ. அருண்குமார், ஒன்பதாம் வகுப்பு,
சேது மாணிக்கம் உயர்நிலைப்பள்ளி
மேலச்சித்தை, இராமநாதபுரம்
மாவட்டம்.



37 ஆம் பக்கம் பார்க்க.



1
2
3
4
5
6
7
8
29
30
31
32
33
34
35
36
37
38
39
40
41
42
43
ஸ்டார்ட்!



நண்பன்

அன்று ஞாயிற்றுக்கிழமை. ஆசிரியர் கொடுத்த வீட்டுப் பாடங்கள் எல்லாவற்றையும் எழுதி முடித்தாகி விட்டது. இனி இன்று பூராவும் இளங்கோவனுக்கு ஒரே ஜாலிதான்.

தற்செயலாக வானொலி பெட்டியை இயக்கியவன், அந்த அறிவிப்பைக் கேட்டதுமே சுதாரிப்படைந்தான்.

'பள்ளி மாணவர்களுக்கான பொது அறிவுப் போட்டி! பரிசுத் தொகை ஐந்நூறு ரூபாய்!'- இளங்கோவன் கவனமாகக் கேட்கலானான். அறிவிப்பு மேலும் தொடர்ந்தது.

'இப்போது கேட்கப்படும் இருபது கேள்விகளையும் எழுதிக் கொள்ளுங்கள். அவற்றிற்கான விடைகளை எண் வரிசைப்படி அஞ்சல் அட்டையில் எழுதி எங்களுக்கு அனுப்புங்கள். உங்கள் முகவரி தெளிவாக இருக்கட்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடைகளை எழுதியிருந்தால், அவர்களில் இரண்டு அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, பரிசுத் தொகை அவ்விருவருக்கும் பகிர்ந்தளிக்கப்படும்.'

போட்டி சம்பந்தமான விவரங்களைக் கேட்டபடியே பேப்பரையும் பேனாவையும் எடுத்துக்கொண்ட இளங்கோவன், கேள்விகளை எழுத ஆயத்தமாகிவிட்டான். எழுதுவதற்கேற்ற கால இடைவெளி விட்டு, நிகழ்ச்சியாளர் நிதானமாக வாசித்த வினாக்களுக்கு 'விடுவிடு'வென்று எழுத்து வடிவம் தந்தன அவன் கரங்கள். விடைகள் வந்து சேர்வதற்கான கடைசி தேதி பற்றிய அறிவிப்புடன் வானொலியில் அடுத்த நிகழ்ச்சி ஆரம்பமானது.

வானொலியை மூடிய இளங்கோவனுக்குத் தலைகால் புரியவில்லை. இம்மியளவு கூடச் சந்தேகம் இல்லாமல் துல்லியமான விடைகளை எழுதும் அளவுக்கு எல்லாமே அவனுக்குத் தெரிந்த

குரு. சீனிவாசன்

பெயருக்குப் பரிசு!


வினாக்கள். ஏதோ தனக்கே பரிசு கிடைத்துவிட்டதைப் போலல்லவா அவன் மனம் குதூகலித்துக் கூத்தாடுகிறது!

ஆர்வத்தோடு அப்பாவின் மேஜை டிராயரை இழுத்தவனுக்கு மகிழ்ச்சி இரட்டிப்பாகியது. அவன் எதிர்பார்த்தது போலவே அஞ்சல் அட்டை தேடாமலேயே கிடைத்து விட்டதே!

முத்து முத்தான கையெழுத்துகளில் 'மடமட'வென்று விடைகளை எழுதி முடித்து விட்டான். அட்டையின் மறு புறம் தனது வீட்டு முகவரியை எழுத முற்படும்போதுதான் அவனுக்குள் அந்தச் சிறு தயக்கம் மெல்லத் தலை தூக்கியது.

'நம்மைப் போல நூற்றுக்கு நூறு சரியான விடை எழுதுவோர் எத்தனை பேரோ? குலுக்கலில் நம் பெயர் வருவதென்றால் அதற்கு அதிர்ஷ்டம் வேண்டுமே?' என்ற நினைப்பில் அவனது தன்னம்பிக்கை தள்ளாடத் தொடங்கியது. அப்போதுதான் தனது நண்பன் பழனியின் ஞாபகம் அவனுக்கு வந்தது. கடந்த மாதம் ஊர்த் திருவிழாவையொட்டி, இளைஞர் நற்பணி மன்ற வளர்ச்சி நிதிக்காக பரிசுக் குலுக்கல் ஒன்று நடைபெற்றது. அதில் ஒரு ரூபாய்க் குச் சீட்டு வாங்கிய பழனிக்கு, மூந்நூறு ரூபாய் மதிப்புள்ள ரேடியோ ஒன்று பரிசாகக் கிடைத்தது.

இளங்கோவின் இணைபிரியாத் தோழன் பழனி. ஒரே கிராமத்தைச் சேர்ந்த அவ்விருவரும் பக்கத்துச் சிறுநகரின் பள்ளியொன்றில் ஒன்பதாம் வகுப்புப் படிக்கிறார்கள். இளங்கோவனின் அப்பா உத்தியோகம் பார்ப்பதால் ஓரளவு வசதி. ஏழை விவசாயிகளான பழனியின் பெற்றோர், அவனை





"என் பையன் நொறுக்குத் தீனி தின்னுக்கிட்டே இருக்கான் டாக்டர்"

"அதுக்கு நான் என்ன பண்ணணும்?"

"அவன்கிட்டேயிருந்து எனக்குக் கொஞ்சம் வாங்கித் தரணும்!"

— காயக்காடு ராமகிருஷ்ணன்

● ●

கஷ்டப்பட்டுத்தான் படிக்க வைக்கிறார்கள். தன் அப்பாவிடம் சொல்லிப் பழனிக்கு நோட்டுகள், பள்ளிக் கட்டணம் போன்ற உதவிகளை இளங்கோவன் பெற்றுத் தந்த சந்தர்ப்பங்கள் எத்தனையோ உண்டு. படிப்பிலும் மற்ற திறமைகளிலும் இருவருமே சரியாக இருப்பார்கள்.

'வானொலிப் போட்டிக்கான விடைகளை அதிர்ஷ்டக்காரனான பழனியின் முகவரி போட்டு அனுப்பிப் பார்த்தால் என்ன? பரிசு கிடைத்தால் அவனது படிப்புச் செலவுக்கு உதவியாக இருக்குமே! ஆனால் முடிவு தெரிகிற வரைக்கும் விஷயத்தை அவனிடம் சொல்லக் கூடாது. சஸ்பென்ஸாக வைத்திருந்து அவனை வியப்பில் ஆழ்த்த வேண்டும்.'

இளங்கோவனின் மனத்தில் இப்படியொரு யோசனை தோன்றியதுதான் தாமதம். பழனியின் வீட்டு முகவரியை எழுதி, இரண்டாம் பேருக்குத் தெரியாமல் தபால் பெட்டியில் போட்டு விட்டு 'கப் சிப்' ஆகி விட்டான். ஐந்தாறு நாட்களுக்குள் அந்த விஷயமே அடியோடு மறந்து போய்விட்டது அவனுக்கு.

ஓரிரு வாரங்கள் ஓடி மறைந்து விட்டன. அன்று சனிக்கிழமை நண்பகல். இளங்கோவன் தன் வீட்டுக்குள் ஏதோ வேலையாக இருந்தான்.

"சார், போஸ்ட்!" என்ற தபால்காரரின் அழைப்புக்குரல் அவனை வாசலுக்கு வர வழைத்தது. கடிதம் அவன் பெயருக்குத் தான்! 'சென்னை வானொலி நிலையம்' என்ற அனுப்புநர் முகவரியைப் பார்த்ததுமே திகைத்துப் போய் உறையைப் பிரித்தான்.

'மாணவர் பொது அறிவுப் போட்டியில் 250 ரூபாய் பரிசு பெற்றுள்ள செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். பரிசுத் தொகை காசோலை மூலம் அனுப்பப்படும். பாராட்டுகள்!'- சுருக்கமான அந்தச் செய்தியால் குழம்பித் தவித்தது அவன் மனம்.

'இதென்ன குளறுபடி? போட்டிக்கான விடைகளைப் பழனியின் பேருக்கல்லவா அனுப்பினேன்? பிறகெப்படி என் பேருக்குப் பரிசுக் கடிதம் வந்திருக்கு? ஒரு வேளை அவசரத்தில் என் பேரையும் விலாசத்தையும் போட்டிருப்பேனா?'- இப்படி கேள்விக்கு மேல் கேள்வியைத் தனக்குத் தானே கிளப்பிக் கொண்டு, தவித்துப் போய் நின்றான் இளங்கோவன்.

"டேய் இளங்கோ!"- பழனியின் குரல் கேட்டு வீதியைப் பார்த்தான். படியேறி வந்த அவன் கையிலும் அதே வெள்ளை நிறக் கடித உறை. அவன் முகத்திலும் குழப்பமும் திகைப்பும் கூத்தாடுவதை இளங்கோவனால் உணர முடிந்தது. ஒருவர் கையிலுள்ள கடிதத்தை மற்றவர் பார்த்துக்கொண்டு நின்ற ஆச்சரியப் பார்வையில், ஓரிரு விநாடிகள் அமைதியில் கழிந்தன.

"இளங்கோ, மூணு வாரத்துக்கு முன்னாடி சென்னை வானொலி நிலையத்திலே..."- சொல்ல ஆரம்பித்த பழனியைத் தொடர விட்டால் தானே? இடைமறித்த இளங்கோவன், "மாணவர் பொது அறிவுப் போட்டி ஒண்ணு நடந்துச்சு..."

உடனே பழனி முந்திக் கொண்டு, "அதுக்கான விடைகளை நான் எழுதி உன் விலாசத்துக்கு..." என்று கூறி முடிக்கும் முன்பே இளங்கோ அவனைக் கட்டித் தழுவிக்கொண்டான்.


"நான் உன் பேருக்கு அனுப்பிட்டு சஸ்பென்சா வச்சிருந்தேன்டா. ஆக மொத்தம் நம்ம ரெண்டு பேருக்குமே பரிசா?"

மகிழ்ச்சியில் திளைத்த இருவர் கண்களிலுமே ஆனந்தக் கண்ணீர் அரும்பத் தொடங்கியது.

மொட்டை பாபு!

கதை: கிருஷ்ணவேணி படம்: விண்மணி




ம்... எல்லாம் ரெடி. பாபுவின் மண்டையைப் பார்த்து, தலை சீவத் தயாராயிட்டேன்.
என்னடா ரகு, நீயே இப்படி கிண்டல் பண்றே? மத்தவங்க எப்படியெல்லாம் கிண்டல் பண்ணப் போறாங்களோ?
இதுக்கெல்லாம் பயப்படலாமா? தொப்பி வாங்கி மாட்டிடலாம். லியாண்டர் பயஸ், அகஸ்ஸிகூட மொட்டையாகத்தான் இருக்காங்க.
உனக்கென்ன சுலபமா சொல்லிட்டே
மறுநாள் திருப்பதியில் –
ஏண்டா பாபு ஒரு மாதிரி இருக்கே?
ம்... ஒண்ணும் இல்லை...


இன்னும் கொஞ்ச நேரத்தில் மொட்டையாகப் போறேன். ரகு இளக்காரமா பார்க்கப் போறான். அழுகையாக வருது.
அங்கு வந்த பாபுவின் அப்பா –
வாங்கடா டிக்கெட் எடுத்தாச்சு.
அங்கிள் நான் முதலில் போறேன்.
நீ எதுக்குப் போறே?
மொட்டை போடத்தான் உன் காய்ச்சல் குணமானால் மொட்டை போடறதா வேண்டிக்கிட்டேன்.
என்னடா யோசிக்கறே? இப்பத்தான் மொட்டைக்குத் துணையா இன்னொரு மொட்டை இருக்கப் போகுதே...
உன்னைத் தப்பா புரிஞ்சிட்டேன் ரகு.

பிருந்தாவனம்

1798ஆம் ஆண்டு நார்வே நாட்டின் பனிப்பகுதி ஒன்றில் ஓடும் லேனா




நதியின் பனிக்குழியில் புதைந்திருந்த மிருகத்தின் உடலும் சதையும் கெடாமல் இருப்பதைக் கண்ட நாய் ஒன்று அம்மிருகத்தின் சடலத்தையே பார்த்து வெகுநேரமாய் குரைத்தது. அந்த நாய் ஏன் வெகு நேரம் குரைக்கிறது என்பதை அறிய அங்கு வந்து பார்த்தவர்கள் பனி இடுக்கில் புதைந்திருந்த மிருகத்தின் சடலம் கெடாமல் இருப்பதைக் கண்டு ஆச்சர்யப்பட்டதோடு, பொருட்களை மிகக் குளிர்ந்த இடத்தில் வைத்தால் கெடாது என்ற உண்மையைக் கண்டுபிடித்தனர். இதைத்தான் பிற்கால விஞ்ஞானிகள் மேலும் ஆராய்ந்து குளிரில் பாக்டீரியாக்கள் செயலிழந்து விடுகின்றன என்று கண்டுபிடித்தனர். அந்த அடிப்படையில் தான் இன்று ஏர் கண்டிஷன் அமைப்புகளும், குளிர் சாதனப் பெட்டிகளும் செய்யப்படுகின்றன.

- **ஜி.கே.எஸ்.மூர்த்தி,**
கோபிசெட்டிப்பாளையம்

முள்ளம்பன்றி


முள்ளம் பன்றி மீனின் உடல் முழுவதும் முள்மயமாக இருக்கும். பார்ப்பதற்கு முள்ளம்பன்றி போல் காணப்படும். பகைப் பிராணிகளிடம்



இருந்து தன்னைக் காக்க மூச்சைப் பிடித்தோ அல்லது நீரைக் குடித்தோ தன் உடலை உப்ப வைத்துக் கொள்ளும். அப்பொழுது உடலில் உள்ள முட்களெல்லாம் சிலிர்த்து ஈட்டிபோல் நிற்கும். இதைக் கண்டு எந்தப் பிராணியும் இதனைத் தாக்க நெருங்காது. அப்படியே தப்பித்தவறி சுறாமீன்கள் இதை விழுங்கிவிட்டால் படாத பாடு பட்டுத் தவிக்க நேரிடும்!

- **பாளை பகம்பொன்.**

மொகஞ்சதாரோ - ஹரப்பா காலத்தில் பயன்படுத்தப்பட்ட கலப்பை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஹரியானா மாநிலத்தில், ஹிசார் மாவட்டம், பனவால் என்னும் இடத்தில்தான் இது சமீபத்தில் கிடைத்துள்ளது. இந்தக் கலப்பை கி.மு. 2300ஆம் ஆண்டுகளில் ஹரப்பாவில் வாழ்ந்த மக்களால் உருவாக்கப்பட்டது. உலகத்திலேயே விவசாயத்




திற்காகத் தயாரிக்கப்பட்ட முதல் கலப்பை இது என்று புதை பொருள் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

- எஸ். மோகன்ராஜ், சீர்காழி.

'பெர்கின்' என்ற மாணவன் மலேரியாவுக்குக் கைகண்ட மருந்தான கொய்னாவைச் செயற்கை முறையில் தயாரிக்க முடியுமா என்கிற சோதனையில் தீவிரமாக ஈடுபட்டு இருந்தான். ஒரு நாள் அனலில் இட்டு அவன் சோதித்துக் கொண்டிருந்த பொருள் அதிகமாக எரிந்து கருகிவிட்டது. ஆத்திரமடைந்த அவன் அதைத் தூக்கி எறிந்தான். அருகில் இருந்த நீர்த்தொட்டி


மீன்!



யில் விழுந்தது. உடனே தொட்டிநீர் முழுவதும் கருநீலமாக மாறிவிட்டது. இது கண்டு வியந்த அவன் அப் பொருளை எடுத்துச் சோதித்துப் பார்த்தான். அதன் விளைவாக செயற்கைச் சாயம் தோன்றியது.

- பி.எஸ். முருகேசன், ஈரோடு.


ஐரோப்பாவிலுள்ள 'சாக்கடல்' நீர்ப்பரப்பின் மேல் மல்லாந்து படுத்துக்



கொண்டு சுகமாகப் புத்தகம் வாசிக்கலாம். நீருக்குள் அமிழ்ந்து போய் விடுவோமோ என்ற பயம் துளிக்கூட வேண்டாம். இக்கடல் நீரில் அதிகளவு உப்பு இருப்பதால் நீரின் அடர்த்தியும் அதிகமாக இருக்கிறது. இதுவே நாம் மிதக்க வசதியாக இருக்கிறது. நம் உடல் இந்நீரைவிட மிகவும் இலேசாக இருக்கிறது.

- சு. பூங்கொடி, சித்தோடு.

பண்டை நாளில் மயில் இறகு அல்லது வாத்து இறகைப் பேனாவாகத் தயாரிப்பதற்குக் கத்தி தேவைப்பட்டது.




கத்தியினால்தான் இறகைச் சாய்வாக வெட்டவும், கூராகச் செய்யவும் முடிந்தது. அதனால் அந்தக் கத்திக்குப் 'பேனாக்கத்தி' என்னும் பெயர் உண்டாயிற்று. அந்த பெயர் இன்றும் வழங்கி வருகிறது.

- சபீதா, ஐந்தாம் வகுப்பு, ஆர்.சி.நடுநிலைப் பள்ளி, ரத்தினபுரம், தூத்துக்குடி.

பிருந்தாவனம்

தீப்பெட்டியை முதன் முதலில் கண்டு பிடித்தவர் ஜான்வாக்கர் என்ற ஆங்கிலேயர். இவர் துப்பாக்கியில் வேகமாகத் தீப்பற்ற வைக்க பொட்டாஸையும் ஆன்டிமனியையும் ஒரு குச்சியில் வைக்க முயன்றார். அப்படி முயன்றதே தீக்குச்சி



கண்டுபிடிக்கக் காரணமாக அமைந்தது. ஆனால் இவர் கண்டுபிடித்த தீக்குச்சி எதில் உரசினாலும் தீப்பிடித்தது. அந்தத் தன்மையை மாற்றித் தீப்பெட்டியின் ஓரங்களில் பூசப்பட்டு இருக்கும் பாஸ்பரஸில் உரசினால் மட்டுமே தீப்பிடிக்கும் பாதுகாப்பான முறையைக் கண்டுபிடித்த பெருமை ஸ்வீடனைச் சேர்ந்த ஜான் என்பவரையும் காரல் லண்டஸ்ட்ராம் என்பவரையுமே சாரும். இவர்கள்தான் இன்றைய 'சேப்டி மேட்ச்' எனப்படும் தீப்பெட்டியை உருவாக்கியவர்கள். இவர்கள் இதைக் கண்டுபிடித்த ஆண்டு 1852.

- **ஏ.கே.நாசர், லெட்சுமாங்குடி.**


பேனாவைக் கண்டறிந்தவர் வாட்டர்மேன் என்பது நம் அனைவருக்கும் தெரியும். வாட்டர்மேன் அமெரிக்காவில் உள்ள ஒரு இன்சூரன்ஸ் நிறுவனத்தில் முகவராக வேலை பார்த்தார். பணக்காரர் ஒருவர் 5 லட்சம் டாலருக்கு பாலிசி எடுக்க முடிவு எடுத்தார். அந்தக் காலத்தில் கட்டைப் பேனாவும், மைக்கூடும்தான் புழக்கத்தில் இருந்தது. கட்டை பேனாவை மையில் தோய்த்து எழுதுவார்கள். பாலிசி ஒப்பந்தம் தயார் செய்து கையெழுத்துப் போட பேனாவில் மையைத் தோய்த்து



எழுதினார். பேனா சரியாக எழுதவில்லை. மீண்டும் தோய்த்து எழுத முயன்றபோது மை கொட்டியது. அதை அபசகுனமாக நினைத்த அந்தப் பணக்காரர் பாலிசி எடுக்க விரும்பவில்லை என்று கூறிவிட்டார். கட்டைப் பேனாவால் தன் வியாபாரமே போச்சே என்று வருத்தப்பட்டார் வாட்டர்மேன். மை கொட்டாத பேனா இருந்தால் எப்படி இருக்கும் என யோசித்தார் அதன் பலனாக அரும்பாடுபட்டு மை ஊற்றி எழுதும் பேனாவைக் கண்டுபிடித்தார்.

- **பெ. நடராஜன், எட்டாம் வகுப்பு, சேதுமாணிக்கம் உயர்நிலைப்பள்ளி, மேலச்சீத்தை, இராமநாதபுரம்.**

பாம்புகள் 15 கோடி வருடங்களாக உலகில் இருந்து வருகின்றன. பாம்புகளில் மொத்தம் 3000க்கும் மேற்பட்ட வகைகள் உள்ளன. இவற்றில் விஷமுள்ள பாம்பு வகைகள் 175தான். பாம்புகளில் மலைப்



பாம்பு வகைகள் தான் முதலில் தோன்றின. விஷப் பாம்புகள் பிற்காலத்தில் தோன்றியவை. பிரமாண்டமான பாம்பு தென் அமெரிக்கக் காடுகளில் காணப்படும் 'அனகோண்டா' என்னும் மலைப் பாம்புவகையே. மிகவும் நீளமான விஷப் பாம்பு ஆசியக் காடுகளில் காணப்படும் ராஜநாகம் ஆகும்.

- **இரா. வினோதினி, இடையர்காடு.**

சைக்கிள் ஓட்டினார் காந்தி!

பவானி தோட்டத்து நிழலில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தாள்.

"என்ன பவானி, பரீட்சைதான் முடிஞ் சுடுச்சே! இன்னும் என்ன தீவிரமா படிச் சிட்டிருக்கே?" என்று கேட்டபடி அருகில் வந்தாள் பவித்ரா.

"பள்ளிக்கூடம் போகும்போது எப்ப லீவு விடுவாங்கன்னு தோணுது. ஆனால் லீவு விட்டவுடன் பொழுதே போகமாட்டேங்குது. நேற்று நூல் நிலையத்துக்குப் போனேன். அங் கிருந்துதான் இந்தப் புத்தகத்தை எடுத்துட்டு வந்தேன். காந்திஜி வாழ்க்கையில் நடந்த 100 சுவையான நிகழ்ச்சிகள் இருக்கு. 70 நிகழ்ச்சி களுக்கு மேல படிச்சிட்டேன். காந்தி சைக் கிள் ஓட்டினது, கிழிசல் துணியைத் தானே தைத்துக்கொண்டதுன்னு நிறைய விஷயங்கள் இதுல படிச்ச பிறகு தான் எனக்குத் தெரிந்தது. கொஞ்ச நேரம் நீ இருந்தால் படிச்சிட்டு உனக் குத் தந்துடறேன்" என்றாள் பவானி.

"ம்.... அது வரைக்கும் நான் சும்மாவா உட்கார்ந்திட்டிருக்கிறது?" என்றாள் பவித்ரா.

"நீ ஒண்ணும் சும்மா உட்கார வேண்டாம். காலம் பொன் போன்றது. இந்தா இந்தப் புத் தகத்தைப் படி." என்றபடியே வந்தான் கோகுல்.

"என்ன புத்தகம் கோகுல்?"- இருவரும் ஆர்வத்துடன் கேட்டனர்.

"நேரம் நல்ல நேரம். லேனா தமிழ்வாணன் எழுதிய புத்தகம். நமக்கு அதாவது இந்தியர் களுக்கு நேரத்தைப் பற்றிய உணர்வு குறை வுன்னு வெளிநாடுகளில் ஒரு எண்ணம் பரவி யிருக்கு. அதை யாரும் மறுக்கவும் முடியாது. இந்த எண்ணத்தைப் போக்கிட திட்டமிட்டு நேரத்தோடு செய லாற்றி காலத்தை வெற்றி கொண்டு முன்னேற வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறது இந்தப் புத்தகம்"- என்று கடகடவென பேசினான் கோகுல்.

"பவித்ரா நான் இதை முடிக்கப் போறேன் அந்தப் புத்தகம் எனக்குத்தான்" என்றாள் பவானி.

"நீ இன்னும் முடிக்கலை. நான் இதைப் படிச்சு முடிச்சிடறேன்" என்றாள் பவித்ரா.

"ரெண்டு பேரும் சண்டை போடாதீங்க. பவித்ரா நல்ல நேரம் புத்தகத்தைப் படிக் கட்டும். உனக்கு இதோ 'அரண்மனை விருந்து' என்றான் கோகுல்.

"அரண்மனை விருந்தா?"- பவானி.

"ஆமாம். இந்தப் புத்தகத்தில் நான்கு நெடுங் கதைகள் உள்ளன. அரண்மனை விருந்துக்கு ஆசைப்பட்டு பல ஆபத்துகளைச் சந்தித்து திரும்பும் கொசு மற்றும் தவளையின் அனு பவங்கள் ரொம்பவே நல்லாயிருக்குது. அடுத்த கதை..."- கோகுலை முடிக்க விடாமல் தடுத் தாள் பவானி.

"நீ கதை சொல்லிட்டா நான் எப்படி படிக்கிறது? இந்தா உனக்கும் இந்திய விஞ் ஞானிகள் பற்றி ஒரு புத்தகம் தரேன். இதுல 35 விஞ்ஞானிகளின் வாழ்க்கைக் குறிக் கங்கள் களை



யாகவும் படங்களுடனும் தரப்பட்டுள்ளன. படிச்சிட்டு பவித்ராகிட்டே கொடுத்துடு" என்றபடி புத்தகத்தில் மூழ்கி னாள் பவானி.

- ரே

• காந்திஜி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள், கங்காராமமூர்த்தி, பக்-160, ரூ. 30/- வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை - 17.

• நேரம் நல்ல நேரம், லேனா தமிழ்வாணன், பக்-132, ரூ. 24/- மணிமேகலை பிரசுரம், 4 தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை - 17.

• அரண்மனை விருந்து, சொ. அடைக் கலம், பக்-140/-, ரூ. 25/- சாந்தி மலர் பதிப்பகம், 8, போலீஸ் குவாட்டர்ஸ் ரோடு, தி. நகர், சென்னை - 17.

• புகழ்பெற்ற இந்திய விஞ்ஞானிகள், முத்துக்குமரன், பக்-128, ரூ. 25/- அழகு பதிப்பகம், 20, ஆசிரியர் சங்கக் குடியிருப்பு, வில்லிவாக்கம், சென்னை - 49.

அக்னிக் குஞ்சுகள்

2. சங்கம் உதயம்!

இளங்கோ என்ன பதில் சொன்னான்?

"நான் தங்கள் ஆசியால் உறுதியாய் இலக்கியத்தில் சாதனை செய்வேன் ஐயா!" - என்றான்.

தமிழ் ஐயா இளங்கோவன் குரலில் தொனித்த உறுதியைக் கண்டு வியந்து போனார்.

"அருள்மொழி, நீ ராஜராஜன் போல வீரச் செயல் புரிவாயா?" என்றார் தாமோதரன்.

இளங்கோவின் பதிலைக் கேட்ட ஊக்கத்தால் அவன், "வீரச் செயல் செய்வேன் ஐயா!" என்றான்.

"நெடுமாறா! பாண்டியர் போலச் சங்கம் வைத்துத் தமிழ் வளர்ப்பியா?"

"சங்கம் வைப்பேன்! தமிழும் வளர்ப்பேன்!" என்றான் நெடுமாறன்.

இப்படி இளங்கோ, அருள்மொழி, நெடுமாறன் – மூவரும் உறுதியாகப் பதில் கூறினர்.

தமிழ் ஐயா, "பலே! பலே!" என்றபடி ஓசை எழாதபடி, கை தட்டினார்!

"உங்கள் தன்னம்பிக்கையைப் பாராட்டுகிறேன். எண்ணிய எண்ணியாங்கு எய்துப என்றார் வள்ளுவர். எப்போது? எண்ணியர் திண்ணியராகும்போது! எண்ணத்தில் உறுதியாய் நின்று செயல்படும்போது! போய் உட்காருங்கள்!"

புதியவர் மூவரும் வகுப்பின் கடைசி வரிசையில் உட்கார்ந்தார்கள்.

மணியடித்தது.

தமோதரனார் வகுப்பை விட்டு வெளியேறினார்.

அடுத்து கணித ஆசிரியர் வந்து பாடம் நடத்தினார்.

பின்பு இடைவேளை!

மாணவர்கள் வெளியே செல்ல, சிலர் இந்த மூவேந்தரைச் சூழ்ந்துகொண்டு உரையாடினார்; கை குலுக்கினர்; தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டனர்.

மனோகரன் இருந்த இடத்திலிருந்தே திரும்பி இந்தக் காட்சியைப் பார்த்தான். பார்வையிலே பொறாமை!



"இன்னைக்கு வந்த புதுப் பையன்களை தமிழ் ஐயா ரொம்பத்தான் உயர்த்திப் பேசிட்டார். நடேசா, அவர்களைச்



சுற்றி எத்தனை பேர், பார்த்தாயா?'' மனோகரன் பொறாமையும் கோபமும் போட்டியிடக் கேட்டான்.

''உம்... பைத்தியக்காரன் பின்னே பத்துப் பேருன்னு சொல்வாங்களே...'' - ஒத்து ஊதினான், மனோகரனின் ஆப்த நண்பன் நடேசன்.

''இந்தப் புதுமோகத்தை வளர விடக் கூடாது! கிள்ளி எறிய வேண்டும்'' என்றான், மனோகரன்.

மற்ற நண்பர்களின் பாராட்டு, விசாரணையில் மூழ்கியபோதும் இளங்கோ மனோகரனை அடிக்கடி பார்த்துக் கொண்டே இருந்தான். 'இத்தனை மாணவரின் நட்புக்கிடையில் நாம் மனோகரனின் வெறுப்பைத் தேடிக் கொண்டிருக்கிறோம்' என்பதை உணர்ந்தான். அது அவன் மகிழ்ச்சியைக் குறைத்தது.

ஒரு வழியாக மூவரும் பள்ளியை விட்டுப் புறப்பட்டனர். உதிரிகளாய் காலையில் பள்ளிக்குள் நுழைந்தவர்கள், மாலையில் ஒற்றுமையோடு வெளியேறினர்.

ஆசிரியர் வைத்த 'மூவேந்தர்' என்னும் பெயர் ஒரு பட்டம் போல தோன்றியது. ஏதோ ஒரு ஆங்கில நாவலில் வரும் மூன்று வீரர்கள், 'அனைவரும் ஒருவர்க்

டாக்டர் பூவண்ணன்

காகவே! ஒருவர் அனைவர்க்காகவே!" என்று சபதம் எடுப்பதை இளங்கோ நினைவு கூர்ந்தான். "நாம் மூவரும் ஒன்றாய் உழைப்போம்! ஒன்றாய் உயர்வோம்!" என்று சொன்னான். மற்ற இருவரும் அதை வரவேற்றார்கள்.

அடுத்து வந்த சனிக்கிழமை, மூவரும் ஷெனாய் நகரில் உள்ள திரு.வி.க பூங்காவில் சந்தித்தனர்.

மூவரும் சிறிது நேரம் ஒன்றும் பேசாமல் உட்கார்ந்திருந்தனர்.

"நெடுமாறா, என்ன யோசிக்கிறே?" - இளங்கோ.

"தமிழ் ஐயா, சாதனை செய்யுங்கள் என்று சொல்லாமல், அவராகவே நமக்கு ஒருகளம் அமைத்துக் கொடுத்து விட்டாரே, அதைப் பற்றி யோசிக்கிறேன்!"

நெடுமாறன் சொன்னதும், அருகே படுத்த நிலையில் புல்லின் மேல்பரப்பைத் தடவிக்கொண்டிருந்த அருள்மொழி, "ஆமாம், நெடுமாறா, உனக்குச் சங்கம், எனக்கு வீரச் செயல்! இளங்கோவுக்கு இலக்கியம். இவற்றை நம்மால் செய்ய முடியுமா? என்ற கவலை பிறக்கிறது" என்றான்.

"முடியுமா என்பது மூடக் கேள்வி! முடியாதா என்பது முன்னேறுபவன் கேள்வி! - என்று எங்கோ படித்திருக்கிறேன்."

"சரியாகச் சொன்னாய் இளங்கோ! நான் முடியாதா என்று என்னையே கேட்டு, முடிய வேண்டும் என்று தீர்மானித்தபோது, ஒரு நண்பன் - நம் பள்ளியின் எட்டாம் வகுப்பு மாணவன் எனக்கு ஒரு வழி காட்டி விட்டான்."

நெடுமாறன் சொன்னதும், படுத்திருந்த அருள்மொழி சட்டென்று எழுந்து உட்கார்ந்து, "என்ன வழி?" என்று கேட்டான்.

நேற்று உணவு இடைவேளையின் போது, வகுப்பில் நெடுமாறன் மட்டும் உட்கார்ந்திருந்தான். அப்போது வகுப்புக்குள் இருவர் வந்தனர். ஒருவன் பொன்னன்; அடுத்தவன் முருகப்பன். இருவரும் எட்டாம் வகுப்பு மாணவர்கள்.


"நீங்கள் ஒன்பதாம் வகுப்பு மாணவர்தானே? எட்டாம் வகுப்புப் புத்தகங்கள் உங்களிடம் இருக்கிறதா? எனக்குக் கணக்குப் புத்தகம் வேண்டும்; இவனுக்கு அறிவியல் வேண்டும். இருந்தால் கொடுத்து உதவுங்கள். இலவசமாகத் தர வேண்டும்! ஏனென்றால் நாங்கள் ஏழை மாணவர்கள்" என்று சொன்னவன் பொன்னன்.

அவன் குரலில் ஒலித்த சோகம் நெடுமாறனையும் சோகத்தில் ஆழ்த்தியது. உடனே, "உங்கள் இருவருக்குமே நீங்கள் கேட்ட புத்தகங்களைத் திங்கட்கிழமை தருகிறேன்" என்று சொன்னான்.

இந்த நிகழ்ச்சியை நெடுமாறன் சோகக் குரலிலேயே சொல்லி முடித்தான்.

"உன்னிடம் அவர்கள் கேட்ட புத்தகங்கள் இருக்கா?"

"இல்லை, என் புத்தகங்களை ஏற்கனவே ஒரு மாணவனுக்குக் கொடுத்து விட்டு வந்து விட்டேன்" நெடுமாறன்.



"பரவாயில்லை; என்னிடம் எட்டாம் வகுப்புப் புத்தகங்கள் அப்படியே இருக்கின்றன. நான் தருகிறேன்"– இளங்கோ சொன்னான்.

"என்னிடம் இருக்கிறது. நானும் தருகிறேன்" – அருள்மொழி கூறினான்.

"நன்றி, நண்பர்களே! பொன்னனின் வேண்டுகோளைப் பற்றி நான் வீட்டில் பேசிக்கொண்டிருந்தபோது, மாடியில் குடியிருக்கும் பெண் பல்லவி தற்செயலாக என் அம்மாவைப் பார்க்க வந்தாள்! அவள் நான் கூறியதைக் கேட்டு, என்னிடம் ஏழாம் வகுப்பு, எட்டாம் வகுப்புப் புத்தகங்கள் இருக்கு. எல்லாத்தையும் தரேன். வேணுங்கிறவங்களுக்கு கொடுன்னு சொன்னாள். இப்போது நீங்க ரெண்டு பேரும் தர்ரேன்னு சொல்றீங்க. இந்த நிமிஷத்திலேதான் எனக்கு ஒரு யோசனை தோணுது. என்னை நெருங்கிக் கேட்ட பொன்னனுக்கும் முருகப்பனுக்கும் அவங்க கேட்ட புத்தகங்களைத் தர்ற போதே, இப்படி பாடப் புத்தகத் தேவையோடு எத்தனையோ பேரு இருப்பாங்க. உங்களைப் போல, பல்லவியைப் போல எத்தனையோ பேர் தங்கள் புத்தகங்களைத் தருகிற தாராள குணத்தோடு இருப்பாங்க. இந்த ரெண்டு முனைகளை இணைக்கிற பாலமா ஒரு சின்ன அமைப்பை உருவாக்கலாமான்னு நினைக்கிறேன்..."



நெடுமாறன் சொன்னதும், "யூ மீன் புக் பேங்க்...? பேங்க் மானேஜர் மகன் ஒரு பாங்க் தொடங்குகிறான். சரிதானே...?" என்று மகிழ்ச்சி புலப்படக் கேட்டான், இளங்கோ. நெடுமாறனின் தந்தை தேசியமயமாக்கப்பட்ட ஒரு வங்கியின் மேலாளர்.

"ஆமாம். புத்தக வங்கிதான். ஆனால் அதைச் சங்கம்னு அழைக்க விரும்புகிறேன்."

"ஓ! தமிழ் ஐயா சொன்ன பாண்டியன் தமிழ்ச் சங்கமா?" – அருள்மொழியின் கேள்வியில் கிண்டல் கலந்திருக்கிறதோ என்று ஐயம் கொண்ட நெடுமாறன்.

"இல்லை! பாண்டியன் தமிழ்ச் சங்கம் அல்ல! இது மூவேந்தர் தமிழ்ச் சங்கம் – இதன் கொள்கை, மாணவருக்குத் தேவையான உதவிகள் செய்வது. நாம் மூவரும் இணைந்து செய்வோம்."

"நெடுமாறா, எங்களுக்கும் உன் திட்டத்தில் பங்கு தருவதற்கு நன்றி. ஒன்றாய் உழைப்போம். ஒன்றாய் உயர்வோம்! இந்தப் புத்தக உதவியை விரிந்த முறையில் செய்வோம். என் தந்தையிடம் சொல்லி, இச் சங்கம் பற்றிய செய்தியை, அவரது நாளிதழில் வெளியிடச் செய்கிறேன். பாட புத்தகம் வேண்டுவோர் அணுகலாம், பாட புத்தகம் வழங்க விரும்புவோர் இச் சங்கம் மூலம் வழங்கலாம் என்று வெளியிடச் செய்கிறேன். நெடுமாறா, உன் வீட்டு முகவரியைத் தருகிறேன்" என்றான் இளங்கோ.

இளங்கோவின் தந்தை ஒரு நாளிதழின் ஆசிரியர் குழுவில் இருக்கிறார். அதனால் இப்படி உறுதியாய்க் கூறினான். மற்ற இருவரும் அதை வரவேற்றுக் கைதட்டினர்.

இப்படியாக... நெடுமாறன் தமிழ்ச் சங்கத்தை ஆரம்பித்து விட்டான்.

செய்தி, நாளிதழில் வெளியானது.

தினமும் பாடநூல்கள் கேட்டு கடிதங்களும் தொலைபேசிச் செய்திகளும் வந்த வண்ணம் இருந்தன.



"ஜெயிலில் ஏன் கம்பியை வச்சிருக் காங்க?"

"அது மின்சாரத்தைக் 'கடத்து'மாமே!

— நெல்லை கவிதாசன்

தினமும் இந்த மூவேந்தர்கள், பள்ளி முடிந்து நெடுமாறன் வீட்டுக்குப் போவார்கள். அங்கே இந்தப் புத்தகத் திருப்பணி தொடர்பான செயல்களில் ஈடுபடுவார்கள்.

ஒருநாள் ஒரு கனமான உறை வந்திருந்தது. யாரோ ஒருவர் நேரில் கொடுத்துக் கையெழுத்து வாங்கிச் சென்றாக நெடுமாறனின் அம்மா கூறினார்.

பிரித்துப் பார்த்தால், உள்ளே நூறு ரூபாய்க் கட்டு! அதோடு ஒரு கடிதம்!

மூவேந்தர் சங்கச் சிறுவர்களே, உங்கள் புத்தகப் பணி போற்றத்தக்கது. உங்கள் பணிக்கு உதவியாக இருக்குமே என்பதால் இந்தச் சிறிய தொகை அனுப்பியிருக்கிறேன். உங்கள் தொண்டு வாழ்க!

இப்படிக்கு
பெயர் சொல்ல விரும்பாத
தொண்டன்

இதைப் படித்த மூவரும் திகைத்துப் போனார்கள்.

இந்தப் பணத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாமா?

ஆலோசனை கேட்க, மூவேந்தர்களின் தந்தையர்களை நெடுமாறன் வீட்டில் சந்திக்கச் செய்தனர். அருள்மொழியின் தந்தை, கோவைத் தொழிற்சாலையின் சென்னைக் கிளைக்குத் தலைவர். மூவரும் நல்ல அறிவுரை தந்தார்கள்.

"வந்த பத்தாயிரத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். இதை வெளியில் சொல்லி, விளம்பரப்படுத்தி மேலும் தொகை வருமாறு செய்யாதீர்கள். எதுவும் அளவுடன் இருப்பது நல்லது. மேலும் தொகை தேவைப்பட்டால், நாங்கள் மூவரும் ஆளுக்குக் கொஞ்சம் தருகிறோம்" என்றனர்.

மூவேந்தர்கள் சம்மதித்தார்கள்.

புத்தக உதவித் தொண்டு மெத்த சிறப்போடு நடந்தது.

ஒருநாள் ஒரு தபால் அட்டை வந்தது.

'என்னிடம் மூன்றாண்டு பாடப்புத்தகங்கள் உள்ளன. நேரில் வந்தால் பெற்றுக் கொள்ளலாம்' என்று கடிதம் சொன்னது. முகவரி அதிக தூரத்தில் இல்லை. சேத்துப்பட்டில் இருந்தது.

"இன்று மாலை எனக்கு வேறு வேலையில்லை! நான் போய்ப் பெற்று வருகிறேன்" என்று அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டான், அருள்மொழி.

அருள்மொழியிடம் சைக்கிள் இருந்தது. மாலை புறப்பட்டான். கார்டு குறிப்பிட்ட தெருவைத் தேடிக் கண்டுபிடித்தான். அது கூவத்தில் மோதி முடியும் தெரு. கதவு எண்ணைப் பார்த்தபடி வந்தால், அதுதான் கடைசி வீடு.

இருள் பரவத் தொடங்கிய நேரம். தெருவில் விளக்குகள் இருந்தன. ஆனால், ஒன்றுகூட எரியவில்லை.

கடைசி வீட்டு கேட்டின் முன் நின்றான். போர்டிகோவில் ஒரு விளக்கு சிறிது வெளிச்சத்தைத் தந்து கொண்டிருந்தது.

'இங்கே யாரும் இருப்பதாகத் தெரியவில்லையே!' என்று நினைத்தாலும், கேட்டைத் தள்ளினான். அது 'கிரீச்' சத்தத்துடன் கொஞ்சம் வழிவிட்டது.

அருள்மொழி இரண்டடி முன்னேறினான்.

அது கர்ஜனையா, உறுமலா? தெரியவில்லை!

அருள்மொழியை அது பயப்படுத்தாவிட்டாலும், தயக்கங் கொள்ளச் செய்தது.

அருள்மொழி நின்று ஓசை வந்த திசையில் பார்த்தான்.

சிறிது தூரத்தில் இரண்டு பென் டார்ச் ஒளிர்வது போலத் தோற்றம்! அது தன்னை நோக்கி வருவது போலவும் தோன்றியது!

"அட கடவுளே! டார்ச் என்னை நோக்கி வருகிறதே!"

அருள்மொழி நினைத்து முடிப்பதற்குள், அவன் உயரத்தில் முக்கால் உயரமிருந்த ஒரு அல்சேஷன் வேகமாக வந்து, அவன் மீது பாய்ந்தது!

(தொடரும்)

உங்களுக்கு இது விடுமுறை யாக இருப்பதால் நாடகப் போட்டியில் பங்கு பெற நிறைய நேரம் இருக்கிறதே! முடிவு தேதி நெருங்குகிறது. உடனே பங்கு கொள்ளுங்கள். பரிசை வெல்லுங்கள்.



குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவு நாடகப் போட்டி

1. இந்தப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் (+2 உட்பட) மட்டுமே கலந்து கொள்ளலாம்.

2. நாடகங்கள் சிறுவர்களுக்கானதாக இருக்க வேண்டும். நகைச்சுவை, துப்பறிதல், சமூகம், வரலாறு, அறிவியல் என எதைப் பற்றி வேண்டுமானாலும் இருக்கலாம். சொந்தக் கற்பனை என்று உறுதி மொழி யுடன் அனுப்ப வேண்டும்.

3. வெள்ளைத் தாளில் ஒரு பக்கம் மட் டுமே எழுதலாம். கையெழுத்து தெளிவாகப் புரியும்படி இருக்க வேண்டும்.

4. பரிசு பெறாத, பிரசுரத்துக்கு ஏற்கப் படாத நாடகங்களைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகளை ஒட்டிய உறையை நாடகத்துடனேயே இணைக்க வேண்டும். பின்னால் தனியே அனுப் பிப் பயனில்லை. இது குறித்து எந்த விதக் கடிதப் போக்குவரத்தும் வைத் துக் கொள்ளப்படமாட்டாது.

5. இதில் கலந்து கொள்ள கட்ட ணம் ஏதும் இல்லை. ஒருவரே எத் தனை நாடகங்களை வேண்டு மானாலும் அனுப்பலாம்.

6. நாடகங்களை முதல் முறை வெளியிடும் உரிமை கோகு லத்திற்கே உண்டு. பிறகு இதன் உரிமை முழுவதும் ஆசிரியருக்கே.

7. முடிவு தேதி **30.4.2001.** இதற்கு மேல் வருபவை பரிசீலனைக்கு ஏற்கப்படமாட் டாது.

8. அயல்நாட்டில் உள்ளவர்கள், இந்தியாவில் நண்பர் அல்லது உறவினர் முகவரியைக் கட்டாயம் தரவேண்டும்.

9. நாடகங்களை **ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097** என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். உறையின் மேல் **'அழ.வள்ளியப்பா நினைவு நாடகப் போட்டி'** என்று அவசியம் குறிப்பிட வேண்டும்.

10. போட்டி குறித்து எழும் எவ்விதப் பிரச்னைகளுக்கும் சந்தேகங்களுக் கும் ஆசிரியர் எடுக்கும் தீர்ப்பே முடிவானது.

முதல் பரிசு – ரூ. 500/-
இரண்டாம் பரிசு – ரூ. 300/-
மூன்றாம் பரிசு – ரூ. 200/-



• சச்சின்

விளையாட்டு அரங்கம்

சாதனை வீரர்கள்!

இந்தியா, ஆஸ்திரேலியாவுக்கு இடையே நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் இந்தியா மோசமான தோல்வியைச் சந்தித்தது. இரண்டாவது டெஸ்ட் போட்டி கோல்கத்தாவில் நடைபெற்றது. முதலில் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 445 ரன்களைக் குவித்தது. அடுத்து இந்தியா களமிறங்கியது. 171 ரன்கள் எடுத்த நிலையில் அனைத்து விக்கெட்களையும் இழந்து, பாலோ ஆன் நிலைக்குச் சென்றது. ஆனால் எதிர்பாராதவிதமாக இரண்டாவது இன்னிங்ஸில் 657 ரன்களைக் குவித்தது. இதில் ஆந்திராவைச் சேர்ந்த வி.வி.எஸ். லக்ஷ்மன் 281 ரன்களை எடுத்தார். 384 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கில் ஆடத் தொடங்கியது ஆஸ்திரேலியா. இந்திய வீரர் ஹர்பஜனின் அபாரமான பந்து வீச்சால் மளமளவென்று விக்கெட்கள் சரிந்தன. இதில் அடுத்தடுத்து 3 விக்கெட்கள் வீழ்த்தி ஹாட்ரிக் சாதனை படைத்தார் ஹர்பஜன். இறுதியில் 212 ரன்கள் எடுத்த நிலையில் ஆஸ்திரேலியா சுருண்டது. 171 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா இரண்டாவது டெஸ்டில் வெற்றி பெற்றது.

• வால்ஷ்



அடுத்து இறுதி டெஸ்ட் போட்டி சென்னையில் நடைபெற்றது. ஆஸ்திரேலியா, இந்தியா இரண்டு அணிகளும் தலா ஒரு போட்டியை வென்ற நிலையில் இந்தப் போட்டி இரு அணிகளுக்கும் முக்கியமானதாகிவிட்டது. முதலில் பேட் செய்த ஆஸ்திரேலியா 391 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தது. அடுத்து ஆடிய இந்தியா 501 ரன்களைக் குவித்தது. இரண்டாவது இன்னிங்ஸில் 265 ரன்களை மட்டுமே எடுத்தது ஆஸ்திரேலியா. வெற்றி இலக்கான 155 ரன்களை அடித்து இந்தியா தொடரைக் கைப்பற்றிக்

கொண்டது.

இந்தப் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் சதமடித்தார். இது அவருக்கு 25வது டெஸ்ட் சதமாகும். 3 டெஸ்ட் தொடரிலும் சேர்த்து 32 விக்கெட்டுகளை எடுத்த ஹர்பஜன்சிங் தொடர்நாயகன் விருதைப் பெற்றார். நீண்ட நாட்களுக்குப் பின் கிடைத்த இந்திய அணியின் வெற்றி ரசிகர்களின் உள்ளத்தில் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் அளித்திருக்கிறது. இதன் மூலம் தொடர்ந்து 16 டெஸ்ட்களில் வென்ற ஆஸ்திரேலிய அணியின் சாதனைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.



• கோபிசந்த்

ஆஸ்திரேலிய, இந்திய அணிகளுக்கிடையில் ஒரு தினப் 5 போட்டிகள் நடைபெற்று வருகின்றன. 3வது ஒரு தினப் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் 139 ரன்களை எடுத்தார். இதன் மூலம் ஒரு தினப் போட்டியில் 10,000 ரன்களைக் குவித்து உலக சாதனை படைத்திருக்கிறார். ஒரு தினப் போட்டியில் ஆஸ்திரேலியா கோப்பையை வென்றுவிட்டது.


மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் வேகப் பந்து வீச்சாளர் கோர்ட்னி வால்ஷ். மேற்கிந்தியத் தீவுகளில் தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான 2வது டெஸ்டில் ஜாக்காலிஸ் விக்கெட்டை வீழ்த்தினார். இது அவருக்கு 500வது டெஸ்ட் விக்கெட். டெஸ்ட் போட்டிகளில் 500 விக்கெட்டுகளை வீழ்த்தி புதிய உலக சாதனை படைத்திருக்கிறார் வால்ஷ். ஒரு சில வருடங்களுக்கு முன்புதான் கபில்தேவின் சாதனையை முறியடித்தார் வால்ஷ். சமீபகாலமாக கடினமாக உழைத்து 500 என்ற இலக்கை அடைந்திருக்கிறார் வால்ஷ். 1984 ஆம் ஆண்டு தமது 22 வயதில் விளையாடத் தொடங்கினார். ஒரு இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகளை வீழ்த்தும் சாதனையை 21 முறை செய்திருக்கிறார். 1994-95ல் வெலிங்டனில் நியூசிலாந்துக்கு எதிராக 37 ரன்கள் கொடுத்து 7 விக்கெட்டுகளை வீழ்த்தியது அவருடைய சிறப்பான சாதனை. 3 முறை ஒரு போட்டியில் பத்து விக்கெட்டுகளை வீழ்த்தியிருக்கிறார்.

குறி பிசகாமல் நீண்ட நேரம் பந்து வீசும் திறமை படைத்த பொறுமைசாலி வால்ஷ்.

ஆல் இங்கிலாந்து சாம்பியன்ஷிப் பாட்மிட்டன் போட்டிகள் இங்கிலாந்தில் நடைபெற்றன. இதில் இந்தியாவிலிருந்து கோபிசந்த் கலந்துகொண்டு சாம்பியன் பட்டத்தை வென்றிருக்கிறார். 27 வயதான கோபிசந்த் ஆந்திராவைச் சேர்ந்தவர். இவரின் சாதனைக்கு ஆந்திர அரசு 25 லட்ச ரூபாயைப் பரிசாக வழங்கியிருக்கிறது.

குறுக்கெழுத்துப் புதிர் விடை!

1 சி	த்	தி	ரை		ம்	ல	ல்	2 வெ
ந்			தி		ர			ள்
த			3 கு		4 வ	டை		ள
ணை	ன்	5 அ		ழ்	6 தா		7 மா	ரி
		லை				ணை		
து	8 கா		9 தை	10 க		11 சே	வ	ல்
ந்		12 க	ரி		13 ஒ			த
ரு			ய		நா			ர்
14 ப	ர	த	ம்		ய்	கா	ங்	15 தே



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

புதிர், ஜோக்ஸ், க்விஸ் மட்டுமா? படக்கதைகள், நகைச்சுவைக் கதைகள், புராணக்கதை, கட்டுரை, துணுக்குகள்... இன்னும் ஏராளமான அம்சங்களையும் தாங்கி வரும் கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்! உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.



1. அண்மையில் கடலில் மூழ்கடிக்கப்பட்ட ரஷ்ய விண்கலம் எது?

அ) ஸ்புட்னிக் ஆ) மிர் இ) அப்பலோ

2. மனிதன் தோன்றி எவ்வளவு ஆண்டுகள் ஆகின்றன?

அ) 11 ½ லட்சம் ஆண்டுகள் ஆ) 11 ½ கோடி ஆண்டுகள் இ) 10 கோடி ஆண்டுகள்

3. கோப்பெருஞ்சோழனின் நண்பர்?

அ) பிசிராந்தையார் ஆ) சேக்கிழார் இ) நக்கீரனார்

4. பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகர்?

அ) கோலாலம்பூர். ஆ) ஜகார்தா இ) மணிலா

5. ஒலிம்பிக்ஸ் தோன்றிய இடம்?

அ) கிரேக்கம் ஆ) எகிப்து இ) அமெரிக்கா

6. இவற்றில் எது கொறி விலங்கு?

அ) முயல் ஆ) பூனை இ) எலி

7. டென்னிஸ் வீராங்கனை ஸ்டெஃபி கிராஃப் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

அ) ஜெர்மனி ஆ) ஸ்வீடன் இ) பிரான்ஸ்

8. எந்த மொகலாய மன்னரின் ஆட்சிக் காலம் பொற்காலம் என்று அழைக்கப்படுகிறது?

அ) ஷாஜஹான் ஆ) ஔரங்கசீப் இ) ஜஹாங்கீர்

9. இந்தியாவின் ஏழு தீவுகளின் நகரம் என அழைக்கப்படுவது எது?

கோகுலம் க்விஸ்

அ) சென்னை ஆ) கோல்கத்தா இ) மும்பை

10. பூச்சிகளைச் சாப்பிடும் செடி எது?

அ) பிட்சர் செடி ஆ) தாமரை இ) பெரணி

மேற்கண்ட பத்து கேள்விகளுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு விடை சரியானது. சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி, உங்கள் முழு முகவரியையும் குறிப்பிட்டு முகவரி கூப்பனையும் ஒட்டி அனுப்புங்கள். சரியான விடைகளை எழுதிய 20 பேருக்குப் பரிசு வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தரவேண்டும். கடைசி தேதி 31.5.2001.

ஆசிரியர், கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 97.


ஓவியப் போட்டி!

எங்கும் கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கிறது. வெயில் நேரத்தில் நீங்கள் காணும் காட்சிகளைப் படமாக வரைந்து அனுப்புங்கள். படம் வண்ணத்தில் இருக்க வேண்டும். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. முழு முகவரியைத் தரவும். கடைசி தேதி 20.5.2001


உயிர்வாழ முக்கியமானது! சிறுநீரகம்!

நீங்கள் நிறைய தண்ணீர் குடிப்பவரா? பரவாயில்லை. தண்ணீரை குடிக்காதவரா? அதுவும் பரவாயில்லை. இந்த இரு வேறு நிலைகளையும் சமாளித்து உங்கள் உடலைச் சமநிலைப் படுத்தி வைத்திருப்பது எது? உங்கள் உடம்பிலுள்ள நீரின் அளவை, துல்லியமாக அளந்து பார்த்து சரி செய்வது எது? எது உங்களின் தாகத்தைத் தூண்டுவது? 'நான் வளர்கிறேனே மம்மி!' என்று நீங்கள் வளரும் போதெல்லாம் உண்டாகும் சிதைவின் கழிவுப் பொருட்களை வெளியேற்றுவது எது? உடலின் நடுநாயகமாய், வயிற்றுப் பகுதியில் தண்டுவடத்தின் இரு பக்கமும், 'ஜெயண்ட் சைஸ்' அவரை விதை போல கருஞ் சிவப்பாய் ஒட்டிக் கொண்டிருக்கும், சதைப் பகுதியே சிறுநீரகம் ஆகும். இவை இரண்டும் ஒரே நேர்கோட்டில் இல்லை. வலது பக்க சிறுநீரகம் கொஞ்சம் கீழிறங்கியும், இடப்பக்க சிறுநீரகம், சிறிது உயரத்திலும் உள்ளது. ஒவ்வொரு சிறுநீரகமும் சுமார் 10-12 செமீ நீளமும், 8-9 செ.மீ அகலமும் உடையது. நாம் செயல்பட ஒரு சிறுநீரகம் மட்டும் போதும். ஆனாலும் பாதுகாப்புக் கருதி பத்திரமாக இருக்கவே இன்னொரு சிறுநீரகம் வைக்கப்பட்டுள்ளது.

சிறுநீரகத்தின் உள்ளே என்ன இருக்கிறது தெரியுமா? அதனை குறுக்கே வெட்டிப் பார்த்தால், வெளி ஓரத்தில் கருஞ் சிவப்பா கார்டெக்ஸும் உட்பக்கம் இளஞ் சிவப்பான மெடுல்லாவும் தெரியும். மெடுல்லாவின் நடுப்பகுதியில் சிறுநீரகத்திற்கு இரத்தத்தைக் கொண்டுவரும் தமனியும், இங்கிருந்து இரத்தம் வெளியேறும் சிரையும் உள்ளன. அத்துடன் சிறுநீரை எடுத்துச் செல்லும் சிறுநீர் குழாயும் உள்ளது. வளைந்த கருஞ்சிவப்புப் பகுதியில்தான், வரிசையாக 1,00,000 நெப்ரான்கள் (சிறுநீர் உற்பத்தி களன்கள்) அடுக்கப்பட்டுள்ளன. இவைதான் சிறுநீரை ரத்தத்திலிருந்து பிரித்து வடிகட்டி. வெளியே அனுப்பச் செய்யும் இயந்திரங்கள். ஒவ்வொரு நெப்ரானும் தனித் தனியே செயல்படக் கூடியவையாகும். ஒட்டுமொத்தமாய் இவை ஒரு நாளைக்கு எவ்வளவு நீரை வடிகட்டுகின்றன தெரியுமா? 180 லிட்டர். ஆனால் அவ்வளவு நீர் உங்கள் உடலில் உண்டாவதும் இல்லை; அவை அப்படியே வெளியேற்றப்படுவதும் இல்லை. ஒரு நிமிடத்தில் வடிக்கப்படும் 125 மிலி ரத்த நீரில், 124 மில்லி மீண்டும் உட்கிரக்கப்பட்டு, 1 மில்லி லிட்டர் மட்டுமே சிறுநீராக வெளி வருகிறது. ஒரு நாளில் நெப்ரான்கள் மூலம் வடிக்கப்படும் 180 லிட்டர் வடிநீர், சுழல் முறையில் 179 லிட்டர் உடலில் உட்கிரகிப்படுகிறது.



• சிறுநீரகத்தின் உட்தோற்றம்



* சிறுநீரகம்

நெப்ரான் குழல்களின் வடிவமைப்பும், செயல்பாடும் அற்புதமானது. நெப்ரான் எனப்படும் சிறுநீர் வடிகட்டியின் செயல்பாடு, மண்புழுவிலிருந்து மனிதன்வரை ஒரே மாதிரியானது. நெப்ரானில் ரத்தக் குழாய்களின் முடிச்சு போன்ற குளோமெருலஸ் என்ற வடிகட்டி அமைப்பும், அதிலிருந்து U போல் வளைந்து செல்லும் குழலும் உள்ளன. குளோமெருலஸைச் சுற்றிலும், கிண்ணம் போன்ற அமைப்புடைய இரு செல் அடுக்குள்ள 'பௌவ்மென் கிண்ணம்' உள்ளது. இதில்தான் சிறுநீருக்கான திரவம் இரத்தத்திலிருந்து வடிக்கப்படுகிறது.

நெப்ரானின் அடிப்படை வேலை என்பது இரத்தத்தைச் சுத்திகரிப்பதுதான். வேண்டிய பொருட்களை தக்க வைத்துக் கொண்டு, வேண்டாத பொருட்களை வெளியேற்றுவது.

U வடிவ குழாயின் சேய்மைப் பகுதியில் விரைவு குழாய் சுரப்பு என்ற செயல்பாடு மூலம்தான் உடலுக்குத் தேவையில்லாத பொட்டாசியம், ஹைடிரஜன் அயனி, அமோனியா மற்றும் நீங்கள் எடுத்துக் கொள்ளும் மருந்துகளின் வேண்டாத கழிவுப் பொருட்கள் எல்லாம் நேரிடையாக குழாய்க்குள் நுழைகின்றன. இவை குளோமெருலஸின் மூலம் வடிகட்டப்படுவதில்லை. சிறுநீர் வடிக்கப்பட்டு சிறுநீர்ப் பையைச் சென்றடைய 1½ நிமிடம் ஆகிறது.

சிறுநீரகத்தின் செயல்பாட்டைக் கட்டுப்படுத்துவது பிட்யூட்டரியிலுள்ள ஆண்டிடையூரடிக் ஹார்மோன் மற்றும் வாசோபிரஸ்ஸின்தான். இத்துடன் சிறுநீர் வெளியேற தானியங்கி நரம்பு மண்டல செயல்பாடும் தேவை. இந்த ஹார்மோன்கள் செயல்பட வில்லையென்றால், நீர் உட்கிரகிக்கப்படாமல், நீர் அதிகமாக வெளியேறும். இந்த வியாதிக்கு 'டையபடீஸ் இன்சிபிடில்' என்று பெயர்.

உடலுக்கு தேவையற்ற அனைத்துப் பொருட்களும் முக்கியமாக யூரியா, கிரியேட்டி



* நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும்.

ளின் மற்றும் உடலிலுள்ள நச்சுப் பொருட்கள் சிறுநீர் மூலம் வெளியேறுகின்றன. சிறுநீர்ப்பைதான் சிறுநீர் சேமிக்கும் இடமாகும். இதன் கொள்ளளவு 1 லிட்டர். ஆனால் இதில் 200 - 400 மி.லி நிரம்பும்வரை வெளியேற்றப்படும் அழுத்தம் உண்டாகாது. இந்த அளவுக்கு மேல் சிறுநீர் சேகரிக்கப்பட்டால், 'ஸ்ட்ரெட்ச் உணர்வாங்கி' என்ற சிறப்பு நரம்பு மூலம், தகவல் மூளைக்குச் செல்ல, வெளியேற்றப்பட வேண்டும் என்ற உணர்வு ஏற்படும். நேரமும், இடமும், தக்கதாய் இருப்பின், மூளை பதில் தகவல் தந்து, சிறுநீரை வெளியேற்ற கட்டளை இடும்.

● சிறுநீரகம் வேலை செய்யாவிடில் நாம் உயிரோடு இருக்க முடியாது. குளோமெருலஸுக்கு வரும் தந்துகிகளின் அழுத்தம் குறைவாக இருந்தாலும் சிறுநீர் வடிகட்டுவது அடியோடு நின்றுவிடும்.

● பாதரசம், யுரேனியம், தங்கம் மற்றும் கன உலோகப் பொருட்கள் நெப்ரான்களைச் செயலிழக்கச் செய்யும். (தங்க பஸ்பம் சாப்பிட்டால் நீண்ட நாளைக்கு இருக்கலாம் என்பதெல்லாம் பொய்)

● உடலில் அடிக்கடி பாதிக்கப்படும் உறுப்பு சிறுநீரகம்தான். காய்ச்சல் வந்தாலும் கூட சிறுநீரகம் பாதிக்கப்படுகிறது.

● ஸ்ட்ரெப்டோகாக்கஸ் என்ற பாக்டீரியா தொண்டையைத் தாக்கிப் புண் ஏற்படுத்தி, பின், குளோமெருலஸைத் தாக்கி, வீங்க வைத்து, செயலிழக்கச் செய்து விடுகிறது.

● சோற்றில் / குழம்பில் கல் இருந்தால், சிறுநீரகக் கல் ஏற்படும் என்பது ஒரு மூட நம்பிக்கை. சிறுநீர் நீண்ட நேரம் வெளியேறாமல் சிறுநீர்ப் பையில் தங்கியிருப்பதால், இதிலுள்ள தாதுப்பொருட்கள், ஒன்று சேர்ந்து, சிறு சிறு கற்களாகும் வாய்ப்பு உள்ளது. எனவே சிறுநீரக கல், நம் உணவிலுள்ள கல்லின் மூலம் வருவதல்ல. அடிக்கடி சிறுநீரை வெளியேற்றிவிட வேண்டும்.

● நம் உடலிலிருந்து சுமார் 1140 கிராம் சோடியம் குளோரைடு உப்பு குளோமெருலஸில், வடிகட்டப்பட்டாலும், சிறுநீர் மூலம் 4-5 கிராம் மட்டுமே வெளியேறுகிறது. மற்றவை மீண்டும் உட்கிரக்கப்படுகின்றன. 'தினமும் 1200 கிராம் பொருட்கள் சிறுநீரக குழாய்கள் மூலம் உட்கிரகிக்கப்படுகின்றன.

● சிறுநீரக செயல்பாட்டிற்குத் தேவையான சக்தியில் 98 சதம், வடி நீரிலுள்ள பொருட்களை உட்கிரகிக்கவே பயன்படுகிறது.

● முதுகுத் தண்டில் பாதிப்பு இருந்தால், சிறுநீர்ப் பையில் சிறுநீர் வடிய, வடிய தானாகவே (கட்டுப்பாடின்றி) வெளியேறும்.

● ஆண்களைவிட, பெண்களுக்குத்தான் சிறுநீரகம் சம்பந்தமான வியாதிகள் அதிகம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஏனெனில் அவர்களின் உடற்கூறு அதற்குத் தகுந்தாற்போல் உள்ளது.

● சிறுநீர் சம்பந்தப்பட்ட வியாதிகள் வராமலிருக்க, முதலில் நிறைய நீர் அதாவது ஒரு நாளைக்கு 4-5 லிட்டர் நீர் அருந்த வேண்டும். சுத்தமாக இருக்க வேண்டும்.


● சிறுநீரை ரொம்ப நேரம் சிறுநீர்ப் பையில் தேங்கியிருக்க அனுமதிக்க கூடாது. சிலர் 9 மணி நேரம்கூட சிறுநீர் கழிக்காமல் இருப்பார்கள். இது உடலுக்கு நல்லதல்ல.

● கங்காரு எலி என்ற பாலூட்டி 'துளிக் கூட நீர் குடிக்காது. இதன் சிறுநீரகம், வளர்சிதை மாற்றம் மூலம் வெளியேறும் நீரை வடிகட்டி, உட்கிரகித்துத் தனக்குப் பயன்படுத்திக் கொள்கிறது.

● நீங்கள் உப்பு அதிகம் உள்ள பொருட்களை உட்கொண்டால், உடனே நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்படும். இதன் காரணம் நாம் உட்கொண்ட அதிக உப்பை வெளியேற்ற அதிக நீர் தேவைப்படும்.

- மோகனா


கோகுலம்
போஸ்டர்
படம் : கே.வி. ஸ்ரீனிவாசன்



கோகுலம் க்விஸ் முடிவு

மார்ச் மாத க்விஸ் போட்டியில் நிறைய பேர் கலந்து கொண்டு, சரியான விடைகளையும் அளித்திருந்தனர். எனவே பரிசுக்குரியவர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்:

1. குண. தமிழன்பன், ஐந்தாம் வகுப்பு, ஊ.ஒ.தொ.பள்ளி, வாழைப்பந்தல் அஞ்சல், வேலூர் மாவட்டம்.
2. டி.எஸ். ஷிபா சுனோஃபர் ஃபாத்திமா, மூன்றாம் வகுப்பு, பள்ளப்பட்டி.
3. ஆர். விஜயலக்ஷ்மி, இடப்பாடி, சேலம் மாவட்டம்.
4. அ. சுபா, எட்டாம் வகுப்பு, ஏ.எம்.ஜி. மேல் நிலைப்பள்ளி, பொம்மிடி, தருமபுரி மாவட்டம்.
5. டி..ஆர். ஹாஜாயாசிர்கான், வாழச்சேரி, திருவாரூர் மாவட்டம்.
6. எஸ். பிரபாகரன், ஒன்பதாம் வகுப்பு, மல்லியங்கானை, காஞ்சி மாவட்டம்.
7. ஜி. நெல்சன் ஜோசப், பன்னிரண்டாம் வகுப்பு, அம்மையார்குப்பம், திருவள்ளூர் மாவட்டம்.
8. ரா. சங்கர், எட்டாம் வகுப்பு, அரசு உயர்நிலைப்பள்ளி, சித்தரேவு, திண்டுக்கல் மாவட்டம்.
9. கே. இளங்கோவன், வன்னீர்பாளையம், கடலூர் மாவட்டம்.
10. பீ. செல்வகுமார், வடக்குக்காடு, நாமக்கல் மாவட்டம்.
11. ஞா. ஷண்முகவள்ளி, மாகாளிபட்டி, மதுரை மாவட்டம்.
12. தே. சுந்தர், பாண்டிச்சேரி.
13. ஹ. அருண்குமார், ஒன்பதாம் வகுப்பு, சேதுமாணிக்கம் உயர்நிலைப் பள்ளி, மேலச்சித்தை, இராமநாதபுரம் மாவட்டம்.
14. ச. செந்தில் செல்வ நிவாஸ், விருதுநகர்.
15. ம. மோனிஷா, நாகர்கோவில்
16. எம். ஜடாவர்மன், கிருஷ்ணகிரி.
17. என். ப்ரீத்தி, ஜலந்தர் மாவட்டம், பஞ்சாப் மாநிலம்.
18. ஆர். சாரதா, சென்னை.
19. ஜெய அரவிந்த் குமார், ஒன்பதாம் வகுப்பு, அணைக்கரை, தஞ்சாவூர் மாவட்டம்.
20. இரா. கற்பகம், மேலகல்கண்டார் கோட்டை, திருச்சி மாவட்டம்.

சரியான விடை

1. சமீபத்தில் கும்பமேளா நடந்த இடம் அல்காபாத்.
2. குறிஞ்சி மலர் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும்.
3. பாரத ரத்னா விருது பெற்ற தமிழ்நாட்டு இசையரசி எம்.எஸ். சுப்புலட்சுமி.
4. சென்னை, மும்பையை அடுத்து பெயர் மாற்றம் செய்யப்பட்ட நகரம் கல்கத்தா.
5. சமீபத்தில் இந்தியாவுக்கு வந்த சீன அதிபர் லீபெங்.
6. சீல் கடலில் வாழ்கிறது.
7. ரேடியோவைக் கண்டறிந்தவர் மார்கோனி.
8. இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் ஜான்ரைட்.
9. ஆஸ்திரேலியாவின் தலைநகர் கான்பெரா.
10. கபில்தேவ் உடன் விளையாடிய வீரர் டெண்டுல்கர்.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

பெரியவர்களின் கனவுகள்



குழந்தைகளின் திறன்கள்

யூடிஐயின் திட்டம்

சில்ட்ரன்ஸ் கேரியர் பிளான்

- குழந்தைகள் 18 வயதை அடையும்போது அவர்களுக்கு கல்விக்கான உதவித் தொகைகள் அல்லது அவர்கள் தொழில் துவங்க, தொழில் நடத்த, வணிகம் செய்ய அல்லது இல்லம் அமைத்துக்கொள்ள நிதி உதவி அளிப்பதை நோக்கமாகக் கொண்டு எப்போது வேண்டுமானாலும் முதலீடு செய்ய ஏற்ற ஒரு கால வரம்பற்ற திட்டம்.
- 15 வயதுக்கு மேற்படாத உள்நாட்டில் வசிக்கும் குழந்தைகள் மற்றும் வெளிநாட்டில் வசிக்கும் இந்தியக் குழந்தைகள் ஆகியோரின் நலனுக்காக இங்குள்ளவர்கள், வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்கள், உள்நாட்டு அமைப்புக்கள் மற்றும் OCBகள் இதில் முதலீடு செய்யலாம்.
- **கல்வி உதவித் தொகை தேர்வு** – இந்த திட்டத்தில் ஆதாயம் பெற குறிப்பிடப்பட்டுள்ள நபருக்கு அவர் 18 வயதை அடைந்ததும் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் கல்வி உதவித்தொகை வழங்கப்படும். கல்வி உதவித் தொகைக்கு தற்போதைய வரிச்சட்டங்கள்படி வரிவிலக்கு உள்ளது.
- **வளர்ச்சி தேர்வு** – இத்திட்டத்தால் நன்மை பெறுபவர் 18 வயதை அடைந்ததும் பகுதியாகவோ அல்லது முழுமை ஆகவோ மறு கொள்முதல் செய்து கொள்ளும் வசதி.
- குறைந்தபட்ச முதலீடு ரூ. 2000/– அதைத் தொடர்ந்து குறைந்தபட்ச முதலீடு ரூ. 1000/–.
- ஒரு யூனிட்டின் முகமதிப்பு ரூ. 10/–.
- யூனிட்களின் விற்பனை என்ஏவியில் 103%. மறு கொள்முதல் 18 வயதை அடைந்தவுடன் என்ஏவி மதிப்பப்படி.

கூடுதல் விபரங்களுக்கு தயவு செய்து உங்களுக்கு அருகிலுள்ள யூடிஐ கிளை பைனான்சியல் சென்டர், தலைமை பிரதிநிதி அல்லது முகவரை தொடர்பு கொள்ளவும்.

யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா

இந்தியாவின் மிகப் பெரிய மியூச்சுவல் ஃபண்ட்

13, சர் விட்டல்தாஸ் தாக்கர்சி மார்க், நியூ மெரைன் லைன்ஸ், மும்பை 400 020.
தொலைபேசி : 203 1818, 209 2998 . இணையதளம்: www.unittrustofindia.com

அமைப்பு: யூடிஐ சட்டம் 1963ன் ஷரத்துக்களின் கீழ் யூடிஐ நிறுவனம் இயங்குகிறது. **பாதிப்பு நிலைமைகள்:** அனைத்து மியூச்சுவல் ஃபண்ட் மற்றும் செக்யூரிடி முதலீடுகள் மார்க்கெட் ரிஸ்கிற்கு உட்பட்டவை. செக்யூரிடி மார்க்கெட்டுகளை பாதிக்கும் காரணங்களால் என்ஏவி திட்டங்களின் மதிப்பு வளர்ச்சி அடையலாம் அல்லது குறையலாம். கடந்தகால செயலாற்றல் எதிர்கால விளைவுகளைக் குறிப்பிடுபவை அல்ல. சில்ட்ரன்ஸ் கேரியர் பிளான் என்பது திட்டத்தின் பெயரே தவிர திட்டத்தின் தரம், அதன் எதிர்கால ஆதாயம் அல்லது வருவாயைக் குறிப்பிடுபவை அல்ல. திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படும் என்று யாதொரு உத்தரவாதமும் அளிக்கப்படமாட்டாது. முதலீடு செய்யும் முன் வழங்கு பத்திரத்தை தயவுசெய்து படிக்கவும்.

தென் மண்டல அலுவலகம்: சென்னை தொ.பேசி: (044) 5210347. **கிளை அலுவலகங்கள்**: சென்னை தொ.பேசி: 5210356, 5230985. • கோயம்புத்தூர் தொ.பேசி: 214973. • மதுரை தொ.பேசி: 738186. • திருச்சி தொ.பேசி: 760060. **ஃபிரான்சைஸ் அலுவலகம்**: சேலம் தொ.பேசி: 416414. **சிடிஆர் கலெக்ஷன் மையங்கள்**: குன்னூர் தொ.பேசி: 31037. • கடலூர் தொ.பேசி: 21712. • தர்மபுரி தொ.பேசி: 61012. • திண்டுக்கல் தொ.பேசி: 432244. • ஈரோடு தொ.பேசி: 252494. • காஞ்சிபுரம் தொ.பேசி: 20076. • காரைக்குடி தொ.பேசி: 22277. • மயிலாடுதுறை தொ.பேசி: 26739. • நாகர்கோவில் தொ.பேசி: 40274. • பாண்டிச்சேரி தொ.பேசி: 339080. • ராஜபாளையம் தொ.பேசி: 21360. • தஞ்சாவூர் தொ.பேசி: 31374. • திருநெல்வேலி தொ.பேசி: 339567. • தூத்துக்குடி தொ.பேசி: 325621 **யூடிஐ பாங்க்**: அடையார் தொ.பேசி: 4464442/43/44. • அண்ணாநகர் தொ.பேசி: 6289045. • டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை தொ.பேசி: 8231085. • ராயபுரம் தொ.பேசி: 2492184/85/86 • தி.நகர் தொ.பேசி: 8239134–35.

எய்ட்ஸை தடுப்பீர் - எல்லோரையும் நேசிப்பீர்.

057/3-2001 C TAM B



முதல் பரிசு :

கே. பூபாலன்,

பதினோராம் வகுப்பு, அரசினர் மேல் நிலைப் பள்ளி, பொதட்டூர் பேட்டை, திருவள்ளூர் மாவட்டம்.

ஆறுதல் பரிசு :

வி.என்.உண்ணாமலை,


ஐந்தாம் வகுப்பு, ஊ.ஒ.து. பள்ளி, செல்லாத்தூர், திருவள்ளூர் மாவட்டம்.



ஆறுதல் பரிசு :

நா. ராதா,

ஒன்பதாம் வகுப்பு, ராணி மெய்யம்மை மெட்ரிக் பள்ளி, புலியூர், கரூர் மாவட்டம்.



ஓவியப்போட்டி முடிவுகள்

மார்ச் இதழில் இயற்கை காட்சிகள் என்ற தலைப்பில் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள்.



இரண்டாம் பரிசு :
என்.எஸ்.கோபால்,
பத்தாம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி,
இராசாநகரம் கிழக்கு,
திருவள்ளூர் மாவட்டம்.



மூன்றாம் பரிசு :
பி. மோகன லட்சுமி,
கோவை.

அப்பா பெயர் திருப்பி அண்ணாமலை

அப்பா பெயர்?


எங்கள் பக்கத்து வீட்டுக்குப் புதிதாக ஒரு குடும்பம் குடி வந்தது. அந்த வீட்டில் ஆறு வயது பெண் ஒருத்தி இருந்தாள். சரியான வால். அவளை அழைத்து "உன் அப்பா பெயர் என்ன?" என்று கேட்டேன். உடனே "திருப்பி அண்ணாமலை" என்றாள். எனக்கொன்றும் புரியவில்லை. மீண்டும் கேட்டேன். "திருப்பி அண்ணாமலை" என்றாள். "இப்படி ஒரு பேரா? நான் கேள்விப்பட்டதே இல்லையே! திருப்பிங்கிறது ஊர் பேரா?" என்றேன். "ஐயோ! அக்கா எங்க அப்பா பேர் அண்ணாமலை. இனிஷியல் பி. எங்கப்பா யாரையும் மரியாதையுடன் திரு என்று சேர்த்துச் சொல்லணும் என்றிருக்கிறார். அதான் திரு. பி. அண்ணாமலை" என்றாள்.

– ஜி. ரேவதி,
சங்கராபுரம்.

எஸ்.டி.டி.

நானும் நண்பனும் போன் செய்வதற்காகக் கடைக்குச் சென்றோம். அது உள்ளூர் தொலைபேசி வசதி மட்டும் கொண்ட கடை. நான் பேசி முடித்தேன். என் நண்பன் தன் பாட்டி வீட்டுக்குப் போன் செய்ய வேண்டும் என்றான். நான் கொடுத்தேன். அவன் எண்களைச் சுழற்றி விட்டு "அப்படியா! ரொம்ப தேங்ஸ் ஆன்ட்டி" என்றான். "பாட்டி இல்லையா?" என்றேன் நான். "நான் போட்டது வெளியூர் நம்பர். ஒரு ஆன்ட்டி இந்த டெலிபோனில் அந்த வசதி இல்லைன்னு சொன்னாங்க" என்றான் அப்பாவியாக. எனக்கோ சிரிப்பை அடக்க முடியவில்லை. அவன் என்னவென்று கேட்டதும் விளக்கினேன். பாவம்! அவனுக்கு கம்ப்யூட்டரில் பதிவு செய்யப் பட்ட குரல் என்று தெரியவில்லை.

–ராமகிருஷ்ணன்,
காயக்காடு.








பார்க்கணும்...

நான் தினமும் வழக்கம்போல் பேப்பர் படிக்கலாம் என்று சென்று கொண்டு இருந்தேன். அப்பொழுது எனது நண்பன் ஒருவன் "எங்கேடா போறே?" என்று கேட்டான். "நான் பேப்பர் பார்க்கப்



போகிறேன்'' என்று கூறினேன். உடனே அவன் "நான் காட்டுகிறேன்" என்று சொன்னான். அவனுடன் சென்றேன். அவனோ பேப்பரை எடுத்துக் காட்டினான். நான் ''படிக்கிறேன் கொடு'' என்று கேட்டேன். அவனோ பார்க்கத் தானே வந்ததாகச் சொன்னே, அதான் பார்த்தாச்சு இல்லே, கிளம்பு'' என்று கூறிவிட்டான்!

– சி. சுதாகர், செஞ்சி.

மூட்டை!

ஊரிலிருந்து மாமா தன் மகனுடன் வந்திருந்தார். எல்லோரும் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கும்போது, "எங்கள் வீட்டில் மூட்டைப் பூச்சி அதிகமாக இருக்கிறது. அதனால் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை" என்று நான் சொன்னேன். மாமாவின் பையன், "எங்கள் வீட்டிலும் மூட்டை உள்ளது. நாங்கள் நிம்மதியாகத்தான் தூங்குகிறோம்" என்றான். நான் "எப்படி?" என்று அதிசயத்துடன் கேட்டேன். அதற்கு அவன், "எங்கள் வீட்டில் இருப்பது அத்தனையும் அரிசி மூட்டையல்லவா!" என்று சொல்ல அனைவரும் சிரித்து விட்டோம்!

– சி. ராஜசேகரன், ராஜபாளையம்.

காது...


வெளியூரிலிருந்து மாமா எங்கள் வீட்டிற்கு வரும் போது அவருடைய செருப்பு சேற்றில் மாட்டிக் கொண்டு 'வார்' அறுந்து விட்டது. அதனால் செருப்பை கையில் பிடித்துக் கொண்டு வந்தார். வீட்டில் பாட்டி மாமாவிடம் "ஏம்பா செருப்பை கையில் பிடிச்சுகிட்டு வர்றே?" என்று கேட்டார். மாமா ''காது அறுந்து விட்டது!'' என்றார். பாட்டி மாமாவின் காதுகளைக் காட்டி ''என்னப்பா ரெண்டு காதும் நல்லாத்தானே இருக்கு!'' என்று சொல்லவும் மாமா உள்பட அனைவரும் சிரித்தோம்!


– ப. காளிதாசன், நீர்விளங்குளம்

சிக்கன் பாக்ஸ்


என் அத்தைப் பெண் சபிதா தமிழ் வழியில் படிக்கிறாள். அவளுக்கு ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்ற ஆர்வம் அதிகம். எங்கள் அப்பாவிடம் ஆங்கிலத்தில் பேசி பாராட்டுப் பெற ஆசைப்படுவாள். எங்கள் அத்தை கோழிக் குஞ்சுகளை வாங்கியிருந்தார். அவற்றை இரவு நேரத்தில் மூட பஞ்சாரம் என்ற கோழிக்கூட்டையும் வாங்கியிருந்தார். சென்ற வாரம் நாங்கள் அங்கு போயிருந்த போது என் அப்பா கூடையைப் பார்த்து "என்ன இது?" என்று அத்தையைக் கேட்க, சபிதா வேகமாக வந்து "சிக்கன் பாக்ஸ் அங்கிள்" என்றதும் எல்லோரும் சிரித்துவிட்டோம்!

– க. சௌம்யாயனி, தூத்துக்குடி.


காட்டு ராஜா
காட்டு ராஜாவான சிங்கம் ஒருநாள் காட்டுக்குள் உலா வந்தது. அப்போது –
அங்கே என்ன சத்தம்?
சர சர...
சத்தம் வந்த இடத்தை அடைந்தது சிங்கம். அங்கே ஒரு யானை மரத்தை வேரோடு சாய்த்துக் கொண்டிருந்தது.
யானைதான் மிகவும் பலம் பொருந்திய பிராணி. அதனால் இந்த மணிமுடியை யானைக்குக் கொடுப்பதுதான் சரி.
email:saifeatures@yahoo.com
மறுநாளே காட்டு விலங்குகளை அழைத்து யானைக்கு முடிசூட்டியது சிங்கம்.
நீதான் என்னைவிட பலசாலி. இன்றிலிருந்து நீதான் ராஜா.



அன்றிலிருந்து யானை காட்டை ஆட்சி செய்து வந்தது.
ஒருநாள் சிங்கம் காட்டில் நடந்து கொண்டிருந்தது. அப்போது –
உதவி, உதவி....
யானையின் அழு குரல் போல இருக்குதே!
ஒரு புலி யானையைத் துரத்திக் கொண்டு சென்றது.
ஏய், நீ ஓடாதே. நீதான் ராஜா.
சிங்கத்தின் வார்த்தைகள் யானையின் காதில் விழுந்தாலும் பயத்தில் ஓடிக் கொண்டிருந்தது.
என்ன ஒரு அவமானம்! இப்படி முட்டாள்தனமாக யானையை ராஜாவாக்கி விட்டேனே!


மறுநாள் காலை சிங்கம் எல்லா விலங்கு களையும் கூட்டியது.
யானையே நீ புலிக்குப் பயந்து ஓடியிருக்கக் கூடாது.
நீங்கள் சொல்வது சரிதான். ஆனால் எனக்குப் புலியை எதிர்கொள்ளும் தைரியம் இல்லை.
முயல் சிங்கத்தின் முன் வந்தது.
நீங்கள் அதிகாரத்தை யானைக்குக் கொடுத்து விடலாம்; ஆனால் தைரியத்தை வழங்க முடியாது!
நீங்கள் எவ்வளவு வலிமையும் தைரியமும் மிக்கவர். அதனால் நீங்களே காட்டு ராஜாவாக இருக்கணும்.
மீண்டும் சிங்கமே காட்டு ராஜாவாகப் பொறுப்பேற்றுக் கொண்டது.



அலெக்ஸாண்டர் ஃப்ளெமிங்

அலெக்ஸாண்டர் ஃபிளெம்மிங் 1881ம் ஆண்டு ஸ்காட்லாந்தில், ஹியு ஃபிளெம்மிங் என்பவருக்கு மகனாகப் பிறந்தார். அலெக்ஸாண்டர் ஃபிளெம்மிங் சிறு வயதாக இருக்கும் பொழுதே அவரது தந்தை ஹியு ஃப்ளெம்மிங் இறந்துவிட்டார். பின்னர் தாயின் உதவியுடன் படிப்பைத் தொடர்ந்தார். எனினும் படிப்பை இடையில் நிறுத்திவிட்டு வேலைக்குச் சென்றார். பின்னர் மருத்துவர் ஒருவர் உதவியால் படித்தார். இவர் தம் இருபத்தைந்தாம் வயதில் செயிண்ட்மேரி மருத்துக் கல்லூரியில் மருத்துவ பட்டம் பெற்று ராணுவத்தில் மருத்துவராகப் பணியாற்றினார்.

ஃபிளெமிங் ராணுவத்தில் மருத்துவராகப் பணி புரிந்ததால், முதல் உலகப் போரில் காயமுற்ற வீரர்களையும் அவர்களது புண்கள் புரையோடுவதையும் நேரடியாகக் காண முடிந்தது. இதற்கான காரணத்தை ஆராயத் தொடங்கினார்.

ஃபிளெம்மிங் தொண்டை புண்ணினை உண்டாக்கும் நுண்ணுயிரியைப் பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார். ஆராய்ச்சிக் கூடத்தில் பாக்டீரியாக்கள் வளரும் சிறிய தட்டுகள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஒரு தட்டைக் கூர்ந்து ஃபிளெமிங் கவனித்த போது நீலம் கலந்த பச்சை நிறக் காளான் படிந்திருப்பதைக் கண்டார். இது அவருடைய கவனத்தை ஈர்த்தது. தட்டில் படிந்திருந்த அந்தப் பொருளே கிருமிகளின் அழிவுக்குக் காரணம் என்பதைக் கண்டறிந்தார். அது 'பெனிசிலியம்' என்ற காளான் என்பதையும் உணர்ந்துகொண்டார். அதிலிருந்து பெனிசிலின் என்ற மருந்தைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

பென்சிலியம், கிருமிகளை அழித்தாலும் உயிரணுக்களுக்கு எவ்வித சேதத்தையும் ஏற்படுத்தவில்லை. 1929 ஆம் ஆண்டு பெனிசிலின் கண்டுபிடிப்பு நிகழ்த்தப்பட்டது.

இரண்டாம் உலகப் போரின்போது பெனிசிலின் பல உயிர்களைக் காப்பாற்றியது. பெனிசிலின் என்ற அதிஅற்புத மருந்து இன்று பல நோய்களை நீக்கி வருகிறது. மேலும் இவர் லைஸோசைம் என்ற நொதியையும் கண்டுபிடித்திருக்கிறார்.

இவருடைய ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளுக்காக இவருக்கு சர் பட்டம் வழங்கப்பட்டது. பென்சிலின் உற்பத்திக்கு உதவிய ஹோவார்டு புளோரி, எர்னெஸ்ட் செயின் ஆகியோருடன் ஃபிளெமிங்குக்கும் 1945ம் ஆண்டு நோபல் பரிசு பகிர்ந்தளிக்கப்பட்டது.

1955-ம் ஆண்டு ஃபிளெமிங் உயிர் நீத்தார்.

— எஸ். பிரியா,
பதினோராம் வகுப்பு,
அரசு மகளிர் மேல்நிலை பள்ளி,
ஆண்டிபட்டி.

தலைகீழாகத் தொங்கும் பறவை!





‘ஸ்பிட், ஸ்பிட்’ என்ற ஒலியோடு தோட்டத்தில் உள்ள மரங்களில் அமரும் பறவையைப் பார்த்திருக்கிறீர்களா? உருவத்தில் மைனாவை விடச் சிறியதாகவும் அழகாகவும் இருக்கும் பறவைதான் மரங்கொத்தி. பெயருக்கு ஏற்றாற்போல் தன் நீண்ட, கூர்மையான, கறுப்பு வண்ண அலகால் மரத்தைக் கொத்தும்.

உடல் பொன் நிறமாகவும், தலையின் உச்சி மற்றும் கொண்டை சிவப்பு நிறமாகவும், கால்கள் சாம்பல் கலந்த பச்சை நிறமாகவும் இருக்கும். தலையில் சின்னச்சின்ன வெள்ளைப் புள்ளிகள் காணப்படும்.

ஒவ்வொரு காலிலும் நான்கு விரல்கள். முதல் விரலும் நான்காவது விரலும் பின்னோக்கியும், இரண்டாவது மற்றும் மூன்றாவது விரல்கள் முன்னோக்கியும் இருக்கும்.

வால் குட்டையாகவும் கூர்மையாகவும் இருக்கும். மரத்தில் கால்களால் பற்றி அமரும்போது இந்தக் கூர்மையான வால் மரப்பட்டையில் குத்தி உடலைச் சமநிலைப் படுத்தும்.



மரங்கொத்தியின் முக்கிய உணவு மரப்பட்டைக்கடியில் இருக்கும் புழு, பூச்சிகள்தான். எனவே மரத்தைக்

கொத்த வேண்டிய கட்டாயம் இதற்கு ஏற்பட்டுள்ளது. மரத்தில் உட்கார்ந்து உளி போன்ற அலகால் 'டொக், டொக்' என்று கொத்தும்போது மரப்பட்டைக்கு அடியில் உள்ள புழுக்களும், பூச்சிகளும் வெளியே வரும். உடனே தன் பசை போன்ற நாக்கை வெளியே நீட்டி உணவை இழுத்துக்



எஸ். சுஜாதா

கொள்ளும். மரங்கொத்தியின் வாழ்க்கைக்கு மரங்கள் இன்றியமையாதவை. இது தவிர பூக்களின் மகரந்தம், சிறு புழு பூச்சிகள், பழத்தின் கொட்டைகளை உடைத்தும் உண்ணும்.

இவை கூடு கட்டுவதில்லை. உயரமான மரங்களில் அலகால் மரத்தைக் குடைந்து மரத்தூளைப் பரப்பி அதில் குடியிருக்கும். இந்தப் பொந்தில்தான் பெண் மரங்கொத்தி 3 முதல் 4 முட்டைகள் வரை இடும். முட்டைகள் சிறியதாகவும் பளபளப்பாகவும் காணப்படும்.

ஆஸ்திரேலியாவைத் தவிர உலகின் எல்லா நாடுகளிலும் இவை வாழ்கின்றன. மரங்கொத்திகளில் நிறைய வகைகள் உண்டு. இந்திய மரங்கொத்திகள் மிக அழகானவை.

நம் நாட்டில் இருவகை மரங்கொத்திகள் உள்ளன. ஒன்று பொன் முதுகு மரங்கொத்தி. இது தென்னந்தோப்பு, தோட்டங்களில் அதிகம் இருக்கும். மற்றது இதை விடச் சிறியது. இதன் முதுகு கறுப்பும் வெள்ளையும் கலந்து காணப்படும். இது மிக நெருக்கமில்லாத காடுகளிலும் மாந்தோப்புகளிலும் குடியிருக்கும். இறக்கை அடித்துப் பறக்கத் தொடங்கி, சிறிது நேரம் இறக்கையை அசைக்காமல் இருந்து மீண்டும் இறக்கையை அடித்துப் பறக்கும்.

மரப்பட்டைகளைக் கால்களால் பற்றிக் கொண்டு தலைகீழாக எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் தொங்கிக் கொண்டிருக்கும். அமெரிக்காவில் வாழும் மரங்கொத்திகள் மரத்தில் துளை போட்டு, அந்தத் துளையில் கொட்டைகளைச் சேமித்து வைக்கின்றன.

மரங்கொத்திகள் பிசிபார்மஸ் வரிசையில், பிசிடே என்ற குடும்பத்தைச் சேர்ந்தவை.

மரங்கள் அழிக்கப்பட்டு வருவதால் மரங்கொத்திகளின் எண்ணிக்கையும் குறைந்து வருகிறது. மரத்தைக் காப்போம்; மரத்திற்குக் கேடு விளைவிக்கும் பூச்சிகளை உணவாக்கி நன்மை செய்யும் மரங்கொத்தியையும் காப்பாற்றுவோம்!





ஆரோக்கிய வாழ்க்கைக்கு நீச்சல்!

கோடைக்கால விடுமுறையை பயனுள்ள முறையில் கழிக்க ஒரு விளையாட்டு தேவை எனில் நீச்சல் கற்றுக் கொள்ளுங்கள். நீச்சல் ஒரு உல்லாச விளையாட்டு மட்டுமல்ல. அது ஒரு உல்லாச உடற்பயிற்சியும் கூட.

கி.மு. 880ம் ஆண்டு நீச்சல் கலை தோன்றியதாக வரலாற்று குறிப்புகள் இருக்கின்றன. ஆரம்பத்தில் இக் கலை வளர ஆசியர்கள், கிரேக்கர்கள், ஜப்பானியர்கள் உதவி உள்ளனர். எகிப்தியர்களும், ரோமானியர்களும் நீச்சல் அடித்துக் குளிப்பதை ஆரோக்கியமாகக் கருதினர்.

19-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆஸ்திரேலியர்கள்தான் பல்வேறு நீச்சலடிக்கும் முறைகளையும், அதற்கான விதிகளையும் உருவாக்கியவர்கள். இங்கிலாந்தில் 1818ம் ஆண்டு லிவர் பூல் கார்ப்பரேஷன் என்ற அமைப்புதான் முதன் முதலாக கடல் நீரைக் கொண்டு நீச்சல் குளம் அமைத்தது. நீச்சல் பயிற்சி அளித்த முதல் அமைப்பு ஒய்.எம்.சி.ஏதான். 1844ம் ஆண்டு இதனைத் தொடங்கியது. இதற்குப் பின் 1860களில் பல நீச்சல் குளங்கள் உருவாயின. 1900 ஆம் ஆண்டு அமெரிக்கப் பள்ளிகளில் நீச்சல் ஒரு பாடமாகச் சேர்ந்தது.

ஜானிவெய்ஸ் முல்லர் என்ற அமெரிக்கர்தான் நீச்சல் போட்டிகளை முதன் முதலாக அறிமுகப்படுத்தியவர். ஒலிம்பிக் போட்டிகளில் நீச்சல் ஒரு போட்டி விளையாட்டாக 1896ல் சேர்க்கப்பட்டது.

உடற்பயிற்சியினால் கிடைக்கக்கூடிய பலம், யோகாவினால் கிடைக்கக்கூடிய வேகம், தோட்டக் கலையினால் கிடைக்கக்கூடிய சக்தி, நடைபயிற்சியால் கிடைக்கும் உந்துதல் இவை அனைத்தும் நீச்சல் பயிற்சி மூலம் கிடைக்கிறது.

ஒரே சமயத்தில் நம் உடலில் உள்ள அத்தனை தசைகளையும் பயிற்சியில் ஈடுபடுத்தும் சிறப்புடையது நீச்சல். உடலில் கூடியுள்ள எடையைக் குறைத்து உடலை ஒரே சீராக அழகாக வைக்க நீச்சல் பயிற்சி உதவுகிறது. மன இறுக்கத்தைத் தளர்த்தி மன அமைதி அளிக்கும் நீச்சல் பயிற்சி. நம் கவனத்தையும் ஒருநிலைப்

படுத்தி நினைவாற்றலையும் பெருக்கும்.

பெருங்குடல், நுரையீரல், வயிறு, இதயம், சிறுகுடல், பித்தப்பை, கல்லீரல், சிறுநீரகம் போன்றவை அனைத்தும் நீச்சல் பயிற்சியின் மூலம் பலமடைகின்றன. நீச்சல் பயிற்சியினால் தோலில் பளபளப்பு கூடும். முகத்தில் ஒரு தெளிவையும், மாறுதலையும் உருவாக்கும்.

தண்ணீரில் நீந்துவது பொதுவாக நல்லது. அதிலும் இருதய நோய் உள்ளவர்கள் தாராளமாக நீந்த வேண்டும் என்கிறார், இதய பாதுகாப்பு அமைப்பின் தலைவர் கே. எல். சோப்ரா.

நீச்சல் பயிற்சிக்கு வயது வரம்பே கிடையாது. பிறந்த சில வாரங்களே ஆன குழந்தைகள் முதல் 70 வயது முதியவர் வரை நீச்சல் பழகலாம்.

நீச்சல் பழகும் குளத்தின் நீர் சுத்தமானதாக இருக்க வேண்டும். குளமும் சுத்தமாக இருக்க வேண்டும்.

நீச்சல் அடிக்கும் போது தண்ணீர் குடிப்பதைத் தவிருங்கள். காரணம் நீச்சல் குளத் தண்ணீரில் குளோரின், அம்மோனியா போன்றவை கலந்திருக்கும்.

நன்றாகச் சோப்பு போட்டு குளித்து விட்டு நீச்சல் குளத்தில் நீந்தி விளையாடுவது நல்லது.

நீச்சல் குளத்தில் எச்சில் துப்பவோ, மூக்கை சிந்தவோ, வாய் கொப்பளித்து துப்புவதோ கூடாது.


நீச்சல் குளத்தில் குளிப்பதால் கண், காது, மூக்கு, தொண்டை போன்றவற்றில் தொற்று நோய் ஏற்பட எளிதில் வாய்ப்புண்டு. எனவே மிகவும் கவனத்துடன் இருக்க வேண்டும்.

மற்றவர்களுக்கு எளிதில் தொற்றிக் கொள்ளும் தோல் வியாதி, மெட்ராஸ் ஐ, ஜலதோஷம் போன்றவை உங்களுக்கு இருந்தால் நீச்சல் குளத்தில் இறங்காதீர்கள்.

அடிக்கடி நீச்சல் குளம் செல்பவர்களாக இருந்தால் தண்ணீரை அடிக்கடி மாற்றுகிறார்களா, தண்ணீரில் பாக்டீரியாக்கள் இல்லாமல் இருக்கிறதா என்பதை ஆய்வு செய்தார்களா என்பதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

நீச்சல் குளம் முழுவதும் சுத்தமாக இருக்க வேண்டும். எந்தத் தொற்றும் தொற்றி விடாதபடி இருக்க வேண்டும், பூஞ்சை, பாக்டீரியா போன்றவை வளராமல் இருக்க 'வேண்டும்.

நீச்சல் பயிற்சியின் போது நீச்சல் சூட் அணிந்தும், காலுக்கு சிலிப்பர் போட்டும் குளிப்பது நல்லது.



நீச்சல் அடிக்க பழகும் போது பாதுகாப்புக் கருவிகள் அருகில் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். முதலுதவி தெரிந்தவர்கள் அருகில் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

நீச்சல் பயிற்சிக்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாக உணவு உண்டிருக்க வேண்டும்.


தினமும் ஒரு மணி நேர நீச்சல் பயிற்சியே போதுமானது. சிறுவர்களுக்கு 30 நிமிடம் போதுமானது.

— கோவீ. இராஜேந்திரன்

மாபெரும் வெற்றியும் மகத்தான தோல்வியும்!

ஆஸ்திரேலியாவுடன் ஆடிய மூன்று டெஸ்ட் தொடரில் இந்தியா 2-1 என்ற அளவில் வெற்றி பெற்றுள்ளது. 'உலக சாம்பியன்கள், உலகெங்கும் தொடர்ந்து பதினாறு டெஸ்ட் வெற்றிகளைப் பெற்றவர்கள்' என்று புகழ் பெற்ற ஆஸ்திரேலியரை முறியடித்ததால் இந்த வெற்றி மகத்தான வெற்றியாகிறது.

இந்தச் சாதனையின் பிரதான நாயகர்கள் வி.வி.எஸ். லக்ஷ்மண், ஹர்பஜன்சிங் ஆகிய இருவருமே என்பதும் உங்களுக்குத் தெரியும். ஆனால் இந்த டெஸ்ட்களை மறக்க முடியாததாகச் செய்தவை லக்ஷ்மண் குவித்த 281 ரன்கள், ஹர்பஜன் சிங்கின் ஹாட்ரிக் மற்றும் இத்தொடரில் அவர் எடுத்த 32 விக்கெட்டுகள் ஆகியன மட்டுமல்ல. ஆஸ்திரேலியா இறுதி வரை விடாப்பிடியாக ஒவ்வொரு டெஸ்டிலும் போராடியதுதான் இந்தத் தொடரை 'த்ரில்லிங்'ஆகச் செய்தது. எனவே ஆஸ்திரேலியாவின் தோல்வி பாராட்டுக்குரிய தோல்வி ஆகிறது. அதுவும் சென்னை டெஸ்டில் வெற்றி வாய்ப்பு நமது கை நழுவிப் போய்விட்டது என்ற முடிவுக்கே வந்துவிட்ட நிலையில் நமது அணி வெற்றிக் கனியைத் தட்டிப் பறித்திருக்கிறது. ஆக, ஆஸ்திரேலியரின் விடா முயற்சியையும் நாம் பாராட்டித்தானே ஆக வேண்டும்!



கிரிக்கெட்டில் மட்டுமல்ல எந்த ஒரு விளையாட்டிலும் இந்த ஊக்கமும் விட்டுக் கொடுக்காமல், சோர்வடையாமல் போராடுகிற மனப்பான்மையும்தான் முக்கியமானவை. இவைதாம் ஆட்டத்தை சாதாரண நிலையிலிருந்து உன்னத நிலைக்கு உயர்த்துகின்றன. எனவே ஆஸ்திரேலிய அணிக்கும் நமது பாராட்டுக்களைத் தெரிவிப்போம்.

அடுத்து, ஒரு நாள் ஆட்டங்களிலும் இரு அணியினரும் இதேபோல் தீவிரமான ஈடுபாட்டுடன் போராடட்டும். எந்த அணி வென்றாலும் அது மகத்தான வெற்றியாகவும் எந்த அணி தோற்றாலும் அது கௌரவமான தோல்வியாகவும் அமையட்டும்.

மே மாதம் பல மாநிலங்களில் தேர்தல்கள் நடக்கின்றன. உங்களில் பலர் இன்னும் வோட்டுப் போடும் வயது அடைந்திருக்க மாட்டீர்கள். என்றாலும் சீக்கிரமே அந்தத் தகுதியைப் பெறப் போகிறீர்கள். எனவே தேர்தலுக்கும் நமக்கும் சம்பந்தமில்லை என்று ஒதுங்காதீர்கள். நேரடியாக அரசியலில் ஈடுபடாவிட்டாலும் அரசியலைக் கவனியுங்கள். நல்லது கெட்டதைப் புரிந்து கொள்ளுங்கள். ஊழல் பேர்வழிகளை இனம் கண்டு கவனத்தில் வையுங்கள். பல்வேறு கட்சிகளின் கொள்கைகளை (இருக்குமானால்) அலசிப் பாருங்கள்.

இந்தியாவின் எதிர்காலம் உங்கள் கையில். உங்கள் எதிர்காலம் இந்தியாவை ஆள்பவர்களின் கையில்.

எனவே உங்களுக்கு இப்போது அரசியல் வேண்டாம்; ஆனால் அரசியல் நோக்கு இப்போதே உங்களுக்குத் தேவைதான்.

– ஆசிரியர்

Edited , printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-


அறிமுகம்
நவீன
வடிவில்
ரிங்-
தேள்கள்,
சிலந்திகள்,
மூட்டைப்பூச்சிகள்,
பல்லிகள்...
பயமுறுத்தும் ரிங் பிராங்கிஸ்!
FREE!
PRANKIES
Rasna
ORANGE
NEW
RICHER
THICKER
TASTIER
ORANGE
NEW

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2000*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 * Registered as a Newspaper in Srilanka

